வெளியீடு—௫

# பிளாரன்ஸ் நைட்டிங்கேல் அம்மையார்

# FLORENCE NIGHTINGALE

தி. நீலாம்பிகை,

20
PR

விலை அணா 8

வெளியீடு - ௫

ஐரோப்பிய அருண்மாதர்

# பிளாரன்ஸ் நைட்டிங்கேல் அம்மையார்

சென்னை, கார்த்விக் மகளிர் கல்லூரித்
தலைமைத் தமிழாசிரியராயிருந்த

திரு. நீலாம்பிகை அம்மையார்

எழுதி வெளியிட்டது.

: திருநெல்வேலி, தென்னிந்திய :

: சைவ சித்தாந்த :

நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்

திருநெல்வேலி : : சென்னை

Third Edition : May, 1938.
Fourth Edition : May, 1939.
Fifth Edition : May, 1945.

PUBLISHED BY
THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
: PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD., :
TIRUNELVELI & MADRAS
July 1947

Paper Issue Card No. MS 95-B, (10-7-47).

[All Rights Reserved]

Printed at Kabeer Printing Works, Madras, 5. MS. 524

# முகவுரை

"'உடன் பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டாம்
உடன் பிறந்தே கொல்லும் வியாதி—உடன்பிறவா
மாமலையி லுள்ள மருந்தே பிணிதீர்க்கும்
அம்மருந்து போல்வாரு முண்டு"—ஔவையார்

உலகத்தில் பிறந்து வாழும் நாட்களில் மக்கள் பல துன்பங்களாற் பற்றப்படுகின்றனர். இத்துன்பங்களிலெல்லாம் மிகக் கொடியது நம் உடலுக்கு வரும் நோய்த்துன்பமேயாம். நோய்வாய்ப்பட்டு வருந்தும் நோயாளிகள் நோய் நீக்கத்தையே வேண்டி நிற்கின்றனர். தன் வீட்டில் நோய்கொண்டு வருந்தும் ஒருவற்கு அவன்றன் சுற்றத்தார் எவ்வளவோ மிகுந்த அன்பு காட்டி அல்லும் பகலும் அவனைக் கருத்தாய்ப் பார்க்கின்றனர்; மருத்துவரொருவரை அழைத்துவந்து அவரால் மருந்து கொடுத்து நோய் தீர்க்கின்றனர். ஏனெனின், ஒரு குடும்பத் தலைவன் நோயாய்க் கிடக்கும்போது, அவன் பாதுகாப்பின் கீழுள்ள அவன்றன் மனைவி, மக்கள், உடன்பிறந்தார் முதலியோர் 'இவர் இறப்பின் யாம் எவ்வாறு பிழைப்போம்!' என்று பலவாறாக எண்ணிக் கவலை மிகப் பெறுதல் காண்கின்றோம். அதனால் அவர்கள் நோயாளிக்கு மகிழ்வன கூறி, நோய் நீங்கத்தக்க முறைகளைச் செய்ய முடியாமல் திகைக்கின்றனர். இவ்வாறு திகைக்கும் பொழுது அன்பும் இரக்கமுமுடைய அயலவரான மருத்துவர் ஒருவர் அங்கு வரின் அவர் வருகையைக் காணும் போதே நோயாளிக்கு ஆறுதலுண்டாகிறது. தன்

மனைவி மக்களைப் பார்த்துக் கவலையுற்றிருக்கும் நோயாளியும் அம் மருத்துவர்பால் நம்பிக்கையுடையவனாய், 'யான் இனி நோய் நீங்கப்பெறுவேன்,' என்று மகிழ்கின்றான்.

இது மட்டுமோ! யான் நேரிற் கண்ட நிகழ்ச்சி ஒன்றை ஈண்டுக் கூறுகின்றேன். பல்லாண்டுகள் பெற்றோர் தவங்கிடந்து பெற்ற ஆண்பிள்ளை ஒன்று மூன்றாம் ஆண்டில் ஒருகாற் கொடிய குளிர்காய்ச்சலாற் பற்றப்பட்டுப் படுக்கையிற் கிடந்து பெரிதும் வருந்தியது. பிள்ளை அந்நோயால் இறந்துவிடுமோ என்று ஏங்கி, அதன் பக்கத்திலேயே அதன் பெற்றோருஞ் சுற்றத்தாரும் சூழ இருந்து வருந்தியபடியே இருந்தனர். ஒருநாட் பிற்பகல் மூன்று மணிக்கு இப்பிள்ளையின் கைகால்கள் இசிவு கொண்டன; உடம்பு திடீரெனக் குளிர்ந்தது; விழித்த கண்கள் விழித்தபடியே இருந்தன; பற்களும் கருகிக் கிட்டிக்கொண்டன; ஆனால் நெஞ்சில் மட்டுஞ் சூடிருந்தது; உயிர் போகவில்லை. இதுகண்ட அவன்றன் அருமைப் பெற்றோருஞ் சுற்றத்தாரும் அவன் இறந்துபோவானென்றே தீர்மானித்து அவன்மேல் விழுந்து அலறி அழத் துவங்கிவிட்டனர். இயற்கையில் தத்தளித்துக்கொண் டிருக்கும் அச்சிறுவனுக்குக் காற்றுச் சிறிதும் வர வழியில்லாமற் பெற்றாரும் உற்றாரும் அவன் மேற் கவிந்து விழுந்து அழுதல் எத்துணைக் கொடுமை!

ஐயகோ! இயற்கையில் தத்தளித்துக் கொண்டிருந்த அக்குழந்தையின் உயிர் மேலுமேலுந் துடிதுடித்து வருந்தியது. அக்குழந்தையினைச் சூழ்ந்துகொண்டு அவர்கள் இடுங் கூக்குரல் கேட்டு அயல்வீட்டிலிருந்த யான் அங்குச் சென்று "ஈதென்னை! குழந்தை உயிரோடிருக்கிறது; காற்றில்லாமல் தத்தளிக்கின்றது; அப்புறம் அகலுங்கள்; நல்ல காற்று வீசிய உடனே குழந்தை



பிழைக்கும்," என்று உரக்கக்கூவி அம்மக்கட் கூட்டத்தை விலக்கினேன். விலக்கிய பின்னர்க், கைதேர்ந்த மருத்துவர் ஒருவரை வருவித்துவிட, அவர் நல்ல மருந்து கொடுத்து, அக்குழந்தை நோய்நீங்கிப் பிழைக்கச் செய்தார்.

ஆகவே, மெய்யன்புடைய இனிய சுற்றத்தவருங்கூட நோய்ப்பட்டு வருந்துந் தம்மவருக்கு நோய்நீக்க ஏலாத நிலையினரா யிருக்கின்றமை அறியப்படும். நோயாளிகளுக்கு உற்றார் உறவினரைவிட, அன்பும் அருளும் உள்ள அயலவரே அவர்தம் நோய் நீக்குதற்கு மிக இசைந்தவராவர். மருத்துவத் தொழிலிற் பல்லாண்டுகள் பழகிப் பலர்க்கும் அருமருந்து தந்துதவிய மருத்துவர்களுந் தமக்கேனுந் தம் மக்களுக்கேனுங் கடுநோய் வருமாயின், தாம் மருந்து கொடுத்தால் ஏது நேருமோ என அச்சங்கொண்டு மற்ற மருத்துவர்களின் வாயிலாகவே மருந்துகொடுத்துத் தமக்குந் தம் மக்களுக்கும் வந்த நோயினை நீக்கிக் கொள்கின்றனர்.

இந் நாட்களிலோ நோய்கொண்டார்க்கு நோய் நீக்க ஆண் பெண்பாலரில் மருத்துவரும் உதவி புரிவாரும் பலர் உளர். பழைய நாளிலோ நோய் கொண்ட இருபாலார்க்கும் உதவி செய்யும் மருத்துவர்கள் ஆண்மக்களாகவே யிருந்தனர்.

பெண்மக்களுக்கு நோய் நீக்குவோரும் ஆண்மக்களாகவே யிருந்தனர். பெண்மக்கள் கருவுயிர்க்குங் காலங்களில் மட்டும், அவர்கட்கு உதவி செய்ய மருத்துவச்சிமார் என்னும் ஒரு வகுப்பார் உளர். இவர்கள் ஏனைய நோய்களுக்கு மருந்து தந்து நோய் நீக்கத் தெரிந்தவரும் அல்லர்; நோய் நீக்குதற்கான உதவிகளைச் செய்பவருமல்லர். என்றாலும்,அத்தி பூத்தாற்போல் இடையிடையே பெண்மணிகளிற் சிற்சிலர் ஆங்காங்குத் தோன்றி

நோயாளிகள் கொண்ட அருந்துயரை நீக்குவதற்கு அரிய பெரிய உதவிகள் செய்து வந்திருக்கிறார்கள். ஒவ்வொரு நாட்டிலும் அத்தகைய பெண்மணிகள் தோன்றியதுண்டேனும், நம் தமிழ் நாட்டில் அங்ஙன மிருந்த பெண்மணிகளைப் பற்றி எழுதிவைப்பார் எவரும் இருந்திலாமையின், அவரைப்பற்றி ஏதுந் தெரிந்துகொள்ளக் கூடவில்லை. ஆனால், வெள்ளைக்காரர் வாழும் மேனாட்டில் தோன்றிய மருத்துவப் பெண்மணிகள் ஆற்றிய அரும் பெருஞ் செயல்களைப்பற்றி அங்குள்ள அறிஞர்கள் விரிவான வரலாறுகள் எழுதி வைத்திருக்கின்றனர். அங்ஙனம் எழுதி வைத்திருக்கின்ற வரலாறுகளுள் பிளாரன்ஸ் நைட்டிங்கேல் (Florence Nightingale) என்னும் மருத்துவப் பெண்மணியாரின் அரிய வரலாறு மிகச் சிறந்ததாயிருத்தலின், அதனை நம் நாட்டு மாதர்களும் உணர்ந்து அவர்போல் நம் தமிழ்நாட்டிலுள்ளார்க்குப் பேருதவி செய்யும் பொருட்டு அவரது வரலாற்றினை என்னாலியன்றமட்டும் இங்கே சுருக்கி வரைகின்றேன்.

ஆங்கில நூல்கள் பலவற்றிலிருந்தெடுத்து மொழி பெயர்த்த வரலாற்றுக் குறிப்புக்களுடன் என்னுடைய உரைப் பகுதிகளையும் ஒருங்கு சேர்த்து இந்நூலை இறைவன் திருவருளால் எழுதிமுடித்திருக்கின்றேன். இந்நூலுக்குச் சில குறிப்புக்கள் தந்துதவிய (முன்னீர்ப் பள்ளம்) சைவத் திருவாளர் மு. ச. பூரணலிங்கம் பிள்ளை (பீ. ஏ., எல். டி.) அவர்களுக்கும், இதனை மிக நுணுக்கமாக ஆராய்ந்து பார்த்துத் தந்த என் அருமைத் தந்தையாரவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைச் செலுத்துகின்றேன்.

பாளையங்கோட்டை,
7-5-33.

தி. நீலாம்பிகை.

# பொருளடக்கம்

பக்கம்


1. பிறப்பும் வளர்ப்பும் ... ... 1
2. பிள்ளைமைக் காலம் ... ... 6
3. இளமைக் காலம் ... ... 11
4. மருத்துவப் பயிற்சி ... ... 16
5. கிரிமியாப் போர் ... ... 21
6. ஸ்குட்டாரி மருத்துவச்சாலை ... ... 26
7. ஸ்குட்டாரி மருத்துவ மாதர்கள் தொழில் முறை ... ... 35
8. அம்மையாருடைய கடவுட்பற்றும் அறிவுரைகளும் ... ... 48
9. அம்மையாரது பிற்கால வாழ்வு ... ... 54


## படம்


க. அம்மையார் உருவப்படம் 1

உ. ஸ்குட்டாரி மருத்துவச்சாலை 25

ங. மருத்துவச்சாலையில் அம்மையார்பணி 29



பிளாரன்ஸ் நைட்டிங்கேல் அம்மையார்



பிளாரன்ஸ் நைட்டிங்கேல் அம்மையார்

# பிளாரன்ஸ் நைட்டிங்கேல் அம்மையார்

(1820—1910)

## 1. பிறப்பும் வளர்ப்பும்

பிளாரன்ஸ் நைட்டிங்கேல் என்னும் அருள்மிகு அம்மையாரின் பெற்றோர்கள் இங்கிலாந்து தேயத்திலுள்ள டேர்பிஷையர்[1] என்னும் நாட்டுக்குரிய ஆங்கில மக்களேயாயினும், அவர்கள் ஐரோப்பா தேயத்தின் தெற்கேயுள்ள இத்தாலியா நாட்டிற் சென்று, அங்குள்ள பல ஊர்களில் வைகிவந்தனர். ஆதலால், நைட்டிங்கேல் அம்மையாருக்குப் பிறப்பிடமாயது அவ் இத்தாலியாவிலுள்ள பிளாரன்ஸ்[2] என்னும் ஊரேயாகும். இவர் அவ்வூரிற் கி.பி. 1820-ஆம் ஆண்டிற் பிறந்தார். இவர்தம் தந்தையார் பெயர் நைட்டிங்கேல் என்பதாகும். இவர், தம் பிள்ளைகளுக்கு ஊர்ப்பெயர்களையே பெயராக வைத்து வழங்குவதில் விருப்பமுடையவர். ஆகவே, தம் மூதன் மகளுக்கு நேப்பிள்ஸ்[3] என்றும், அவட்கடுத்த மகளுக்குப் பிளாரன்ஸ் என்றும் பெயரிட்டார்.

நைட்டிங்கேலும் அவர்தம் மனைவியாரும் இத்தாலிய நாட்டிற் பல ஆண்டுகள் வாழ்ந்திருந்தனர். ஆயினும், பிளாரன்ஸ் என்னுந் தம்மகள் பிறந்தபிறகு அவர்கள் இத்தாலியில் நீண்டகாலந் தங்கவில்லை; வெளியூர் சென்று வாழ்வதில் அயர்வுகொண்டு தம் பழைய ஊராகிய டேர்பிஷையர் என்னுமிடத்திற்கே திரும்பிச் சென்றனர். இவ்வூர் அழகிய மலைகளாலும், யாறுகளாலும் சூழப்பெற்று அழகு மிக்கதாய் விளங்குவது. இவ்வூர் நாட்டுப்புற

[1] Derbyshire. [2] Florence. [3] Naples.

மாகலின் எங்குப்பார்த்தாலும் பச்சைப்பசேலென்ற மரஞ்
செடி கொடிகளே அடர்ந்து காணப்படும். இத்தகைய
இயற்கைக் காட்சியின் பேரழகுமிக்க டெர்பிஷையரி
லுள்ள "லீ ஆல்"[1] என்ற தம் வீட்டிலே நைட்டிங்கேல்
தம் மனைவி மக்களோடு வாழ்ந்து வருவாராயினர்.

நைட்டிங்கேல் ஒரு பெருஞ் செல்வக் குடியிற் பிறந்த
வர்; கல்வியறிவுடையவர்; அறிவு நூல்கள் கற்பதிற்
பேரவா வாய்ந்தவர்; எந்நேரமும் நூல்களைப் பயின்ற
படியே யிருப்பவர். இவர் பல ஊர்களுக்குஞ் சென்று
இயற்கைக் காட்சிகளைக் கண்டு மகிழ்வதிற் பேரவா
வுடையவர். இன்னும், இவர் வெளியூர்களுக்குச் சென்றி
ருந்த காலங்களிலெல்லாம், அவ்வவ் வூர்களிற் சிறந்தன
வாய் உள்ள பொருள்களைத் தெரிந்து தொகுத்து, அவை
களையும் தம் வீட்டிற் கொணர்ந்து அழகுபட வைத்துப்
பார்த்து மகிழ்பவர். தம் ஊரில் உள்ள மக்களில் நோய்
கொண்டாரையும் வறுமைப்பட்டாரையும், அவர் தம்
மனைவியாருடன் போய்ப்பார்த்து, அவர்க்கு வேண்டும்
உதவிகளைச் செய்வதுடன், பொருளுங் கொடுத்து
உதவுவர். நைட்டிங்கேல் கற்றறிவுடையராதலோடு நல்
லியற்கையும் இரக்கமான உள்ளமும் அமையப்பெற்றவர்.
அவ்வூரிலுள்ள தாய் தந்தையர் தம் பிள்ளைகளைப் பள்ளிக்
கூடத்திற்கு அனுப்பிக் கல்வி பயிற்றுவதிற் கருத்துக்
கொண்டவரல்லர். இதுகண்ட நைட்டிங்கேல், பிள்ளைகள்
சிறு பள்ளிக்கூடங்கட்காயினும் அனுப்பப்படல்வேண்டு
மென்று அவர்களின் தாய் தந்தையர்க்குப் பலகால் வற்பு
றுத்திக் கூறி, அவ்வூர்ப் பிள்ளைகள் பள்ளிக்கூடங்கட்குப்
போய்ப் பயிலவும், எழுதவுந் தெரிந்துகொள்ளுமாறு
செய்தார்.

[1] Lea Hall.



இத்தகைய நல்லியல்பு வாய்ந்த நைட்டிங்கேலின்
மனைவியாரும் அவர்போல் மிகவும் நல்லவர். இவர் அர
சாளுமன்ற உறுப்பினருள் ஒருவராகிய உவில்லியம் ஸ்மித்[1]
என்னும் பெரியாரின் மகளாராவர். இவர் இரக்கமுள்ள
நெஞ்சமுடையவர். இப்பெருமாட்டி தம் ஊரவர்க்கு
உதவி செய்யப் போகுங் காலங்களில் பிளாரன்ஸ் முதலிய
அவர்தம் பிள்ளைகளும் அவருடன் செல்வது வழக்கம். தம்
தாயார் பலர்க்குப் பலவகையில் உதவி செய்வதை அடிக்
கடி கண்டுவந்த பிளாரன்சுக்கும் அவளுடன் உடன்பிறந்
தார்க்கும் அவ்வுதவி செய்யும் எண்ணம் பிள்ளைமைக்
காலத்திலேயே அமையலாயிற்று. தாய் தந்தையர்
என்னென்ன பழக்கவழக்கங்களை மேற்கொண்டு வருகின்
றார்களோ, அன்னவைகளையே அவர்தம் இளம்பிள்ளை
களும் எளிதிற் கற்றுக்கொள்வர். இங்ஙனம் தாம்
இளமையில் தம் தாய்தந்தையர்பாற் பழகிய பழக்க வழக்
கங்களுக்கு ஏற்பவே நல்லவர்களாகவோ, தீயவர்க
ளாகவோ அவர்கள் வளர்ந்துவிடுகின்றனர்.

எடுத்துக்காட்டாக, ஊர் ஊராகச் சென்று கூத்தாடித்
திரியுங் கழைக்கூத்தாடிகளின் இளம்பிள்ளைகள் தம் தாய்
தந்தையர் செய்துவரும் அஞ்சத்தக்க கூத்தாட்டுக்களை
யெல்லாம் பார்த்துப் பார்த்துப் பழகி அச்சமற்று வளர்
கின்றன ரல்லரோ? அக்கூத்தாடிகள் ஈராண்டு மூவாண்
டுள்ள தம் குழவிகளையும் ஒரு தென்னை மரத்திற்குமேல்
உயரமாய் நாட்டிய மூங்கிலின் உச்சியிற் கவிழ்த்த தேங்
காய்ச் சிரட்டைமேல் வயிற்றை வைத்துச் சுழலச் செய்
வதையும், கயிறுகளின்மேல் அவர்கள் நடந்துசெல்லச்
செய்வதையும், மனநடுக்கத்தோடு காண்கின்றோமல்லமோ?
இளம்பிள்ளைகள் தம் தாய் தந்தையருடைய செயல்
களையே பின்பற்றி வளர்வராகலின், அவர் தம் தாய்

[1] William Smith, a member of Parliament.

தந்தையர் நல்லவற்றைச் செய்து நல்லராய் வாழவே முயலுதல் முதன்மையாகும்.

ஆகவே, நற்செய்கைகளையே செய்துவரும் நைட்டிங்கேலும் அவர்தம் மனைவியாரும் தம் இயற்கைக்கு ஒத்த பிளாரன்ஸ் என்னும் அரும்பெறற் புதல்வியாரை அடைந்தது வாய்வதே யாகும்.

தம் வீடு லீ ஆல் பூந்தோட்டங்களுக்கிடையிலும் மலைகளுக்கருகேயு மிருந்தமையால், பிளாரன்ஸ் தமது இளமைக் காலத்தை அதில் மிக மகிழ்வாகக் கழித்தார். இவரது ஊரான டெர்பிஷையரிலுள்ள கட்டிடங்களெல்லாங் கருங்கற்களாலேயே கட்டப்பட்டிருந்தன.

இத்தகைய பசுமையான சிற்றூரில் மகிழ்வாகக் காலங் கழித்து வாழும் நைட்டிங்கேல் துரை ஞாயிற்றுக் கிழமைதோறுந் தம் மனைவி மக்களோடு பசிய வயல்நிலங்களினூடே நடந்து டெத்திக் என்னும் இடத்திலுள்ள சிறு கோயிலுக்குப் போய்க் கடவுளை வணங்குவது வழக்கம்.

பிளாரன்ஸ் ஆறாண்டுப் பிள்ளையா யிருந்தபோதே கோயிலுக்குப் போய்க் கடவுளை வணங்குவதில் மிகுந்த விருப்பமுடையவர். இவர் டெத்திக் கோயிலுக்கு வரும்போதெல்லாம் அக்கோயிலில் வணங்கியபிறகு அச்சிறிய ஊரைச் சுற்றிப் பார்ப்பார். சுற்றிப் பார்க்கையில் அவ்வூரிற் பழையகாலத்திற் கட்டப்பட்ட பெரிய அரண்மனை ஒன்று பாழடைந்து கிடந்தது. அதிற் பல இடங்கள் தகர்ந்து வீழ்ந்துபோயினும், சில இடங்கள் மட்டும் மக்கள் இருந்து வாழ்வதற்கு இசைவாயிருந்தன. பிளாரன்ஸ் இக்கட்டிடத்திற்குள் நுழைந்து சுற்றிப் பார்த்தபின், அங்கொரு பக்கத்திற் குடி யிருந்த காவலர் ஒருவரைப் பார்த்தார்; அவர், இன்சொல்லும் இனிய இயற்கையுமுடைய இச்சிறுமியாரைக் கண்டதும் பெரிதும் மகிழ்ந்து, இவரோடு உரையாடிக்கொண்டே



இவர்க்கு அக்கட்டிடத்தின் ஒவ்வொரு பகுதியையும் காட்டினார்.

சில காலத்திற்குப் பிறகு, நைட்டிங்கேல் துரை லீ ஆல் என்னுந் தமது வீடு மழை காலத்தில் வீசுங் கடுங் குளிர்காற்றுக்கு வசதியாயில்லாமை கண்டு, லீ ஆலுக்கு ஒருகல் தொலைவில் லீ அர்ஸ்டு[1] என்னும் மரச்செறிவுள்ளதோரிடத்தில் ஓர் அழகிய இல்லம் அமைத்தார். அதனைச் சூழக் காடு அடர்ந்த மலைகள் நெருங்கி இருந்தமையாற் குளிரின் கொடுமையும், ஊதற் காற்றின் உறைப்பும் ஒலியும் அங்கே இலவாயின. நைட்டிங்கேல் தம் குடும்பத்தாரோடு இப் புதுவீட்டிலிருந்து வாழ்ந்தார்.

பிளாரன்ஸ் இயற்கைக் காட்சிகளைக் கண்டு மகிழ்வதிற் பெருவிருப்ப முடையவர். ஆதலால், தம் வீட்டின் பக்கத்தே அழகியதொரு பூந்தோட்டம் வைத்து, அதிற் கண்கவரத்தக்க பலநிறப் பூக்கள் மலரும் பல வேறு பூஞ்செடிகள் வளர்த்தார்; வளர்த்த அவைகளின் மலர்களைப் பறித்து மோந்தும், அவைகளின் அழகைக்கண்டு மகிழ்ந்தும் உலவுவார்.

என்றாலும், நைட்டிங்கேல் துரைக்கு, இப்போது அமைத்த புதிய மாளிகையுஞ் சில ஆண்டுகளுக்குப்பின் இசையாததாய்விட்டது. ஆகவே, ஆம்ஷையர்[2] என்னும் ஊரில் எம்பிலி[3] என்னுமிடத்தில் தம் கருத்துக்கிசைந்தவாறு மீண்டும் ஓர் அழகிய இல்லம் அமைத்தார். இலையுதிர் காலத்தில் மரஞ்செடி கொடிகள் பசிய இலைகளெல்லாம் உதிர்ந்து அழகற்றவையாயிருக்கையில், லீ அர்ஸ்டை விட்டு எம்பிலிக்கு வந்திருப்பார். இத்துரைமகனார் புல் மரஞ் செடி கொடி முதலான இயற்கைப் பொருட் காட்சியிலேயே மனம் இழுப்புண்டவராதலாற் பச்சைப் பசேலென்று இலைகள் தழைந்த கொடிகளும், நறுமணங்

[1] Lea Hurst. [2] Hampshire. [3] Embly.

கமழும் பூஞ்செடிகளும், அடர்ந்த மரங்களும் நிறைந்த இடங்களின் நடுவிலேயே தம் இருப்பிடங்களை அமைப்பது இவர்க்கு இயற்கையாய் விட்டது.

மறுபடியும் லீஅர்ஸ்டிலுள்ள மரங்களும் பிறவும் பச் சென்று தழைத்த காலத்தில், நைட்டிங்கேல்துரை தங் குடும்பத்தாரோடு அங்கு மீண்டுஞ் செல்வார். அவ்வாறு செல்கையில் இடையிற் சிலபோது இலண்டன் மாநகரத் திலுந் தங்குவார். தங்கி அந்நகரத்தில் இசைவல்லுநர் பாடும் இசைப் பாட்டுக்களைக் கேட்கப்போவார்; திறம்பட எழுதிய ஓவியங்களைக் கண்டு மகிழ்வுஞ் செய்வார்; இன்னும், இவர், தமக்குத் தெரிந்த அறிவுடை யார் பலரையும் போய்க் கண்டு அளவளாவுவார். இவ்வாறு சிலகாலம் இலண்டனிலிருந்து, தமது பழைய இல்லத்திற்குத் திரும்பியவுடன் தம் ஊரவர்களைத் தம் மக்களுடன் போய்ப் பார்த்துவருவார்.

---

## 2. பிளாரன்ஸ் அம்மையாரின் பிள்ளைமைக்காலம்

பிளாரன்ஸ் தாம் இல்லாத காலங்களிற் பிறந்த நாய்க் குட்டி பூனைக்குட்டி முதலான வாயற்ற அழகிய உயிர் களைப் போய்க் காண்பதும், அவை பிணிப்பட்டால் அவற் றிற்குப் பிணிநீக்குதலுஞ் செய்வார். அவை பசியா யிருப்பதறிந்தால், இவர் தம் வீட்டிலுள்ள சர்க்கரை, சீமை இலந்தைப் பழம் (Apple), செங்கிழங்குகள் முதலான உணவுப்பொருள்களைத் தம் பெற்றோர்க்குத் தெரியாமலே எடுத்துப்போய் அவற்றிற்குக் கொடுத்து அவற்றின் பசியை யாற்றுவார்.



இவரது நல்லியற்கையும், இவர்தம் நற்செய்கையுங் கண்ட அவ்வூரவர், தம் நாய் பூனை முதலியன நோய் கொண்டால் பிளாரன்சுக்கு அறிவித்து, அவரைக் கொண்டே அவ்வுயிர்களுக்கு நோய் நீக்குவர். இச் சிறுமியாராகிய பிளாரன்சுக்குச் சிறந்த நண்பர்கள் நாய், பூனை, முயல், அணில், குதிரைக்குட்டி ஆகிய இவையே யாம். பிளாரன்சின் இனிய இயற்கையைக் கண்டார் கேட்டார் அனைவரும் இவர்பால் மிகுதியாய் அன்பு கொண்டார்கள்.

இவர் எம்பிலியில் இருந்தபோது, அவ்வூர்க்குச் சமய குருவாயிருந்த ஒருவர், தம் ஊரவர்களைப் பார்க்கச் செல்லும்போதெல்லாம் இவரையுந் தம்முடன் கொண்டு செல்வார். பிளாரன்சும் இவரொடு மிக மகிழ்வுடன் போவார். இவ்வாறு போவதாற் பிளாரன்ஸ் அவ்வூரவர் பெரும்பாலரையும் அறிமுகமாக்கிக் கொண்டார். அவ் வூர்ப் பிள்ளைகளின் பெயர்களையும் அவர்கள் பிறந்த நாட்களையும் மறவாமற் சொல்லுவார். பிளாரன்ஸ் தம் குருவொடு செல்லும்போது, அவர் அன்னையார் அவரிடஞ் சில நல்ல பண்டங்களைக் கொடுத்து அவற்றை நோயால் வருந்தும் மக்களுக்குத் தருமாறு அனுப்புவார். தாமே வைத்துப் பயிர்செய்த அழகிய பூஞ்செடிகளினின்றும் மணங்கமழும் மலர்களைப் பறித்தெடுத்துக் கொண்டு போய் அவர் நோயாளிகளுக்குக் கொடுப்பார்.

ஒரு நாள் பிளாரன்சும் அக் குருவும் மலைப்பிளவு களின் இடையேயுள்ள அழகிய பள்ளத்தாக்குகளின் ஊடே சென்றார்கள். செல்லுகையில் அவர்களிருவர்க்குஞ் சிறந்த நண்பனை ஆடுமேய்ப்பான் ஒருவன், தன் அருமை நாயின் உதவி யில்லாமலே ஆட்டுக் கூட்டத்தைச் செலுத்த முயன்றான். இதுகண்ட அப் பிளாரன்சும் அவரை உடன் கொண்டு சென்ற குருவும் அவ் ஆடு

மேய்ப்பானை நோக்கி "கேப் என்னும் உமது அருமை நாய் எங்கே?" என்று கேட்டனர். அதற்கவன், "இரக்கமற்ற பொல்லாச் சிறுவர்கள் சிலர் என் நாயின் காலைக் கல்லால் அடித்து முறித்துவிட்டனர்; அதனால், அந்நாய் தன் காலிலுள்ள கடுங் காயத்தினால் பெரிதுந் துன்புற்றுத் துடிதுடிக்கின்றது; இவ்வாறு என் நாய் துன்பத்தால் துடிதுடித்து வருந்திக் கிடப்பதைவிட அதனைச் சாவச் செய்வதே மிகவும் நல்லதென்றெண்ணுகின்றேன்," என்றான். இது கேட்ட அச்சிறுமியார் பெருஞ்சினங் கொண்டு ஆடு மேய்ப்பானை நோக்கி, "நீர் கூறுவது தகாது; அந்நாய்க்கு யான் உதவிசெய்யக்கூடுமென்றெண்ணுகின்றேன்; அது தனியே கிடந்து பெரிதுந் துன்புறுவதால் அதனருகே யானிருப்பது அதற்கு ஆறுதலா யிருக்கும்; அஃது எங்கே யிருக்கின்றது?" என்று வினவினார். "அஃது என்னுடைய சிறு குடிசையின் புறத்தே படுத்துக் கிடக்கின்றது; அதனை நலப்படுத்தல் உமக்கேனும் மற்றவர்க்கேனும் முடியாது," என்று மேய்ப்பன் கூறினான். பிளாரன்ஸ், இவன் கூறியதைக் கருத்தாய்க் கேளாமலே நாய் கிடக்கும் இடத்திற்கு விரைந்தோடித் துன்பத்தால் அயர்ந்து கிடக்கும் அந்நாயைப் பார்த்து மிகவும் வருந்தி, அதன் தலையைத் தடவிக் கொடுத்தார்; அதனால், அந்நாய் பெருமகிழ்வடைந்து அவரை அண்ணாந்து பார்த்துத் தன் நன்றியைத் தெரிவித்தது. அச்சிறுமியார்க்குப் பின்னே உட்சென்ற குருவும் அவரை நோக்கி, "யான் இந்நாயின் காலைப் பார்க்கட்டும்; அது தன் காலை முறிந்ததுபோற் காட்டவில்லை. நாம் விரைவில் அதனை நலப்படுத்திவிடலாம், மகிழ்வாயிரும்," என்றார். இதுகேட்ட அச்சிறுமியாரின் அழகிய கண்கள் பெருங்களிப்பால் மின்னின. "பெரியீர்! நாய் நலமடைய யான் செய்யவேண்டுவன யாவை?"



என்று பேரவாவோடு தம் குருவைக் கேட்டார். மருத்துவஞ் சிறிது தெரிந்த அக்குருவும், "வெந்நீரில் நனைத்த மெதுவான மெல்லிய துணிச்சுற்று கொண்டு அதன் காயப்பட்ட காலைக் கட்டினால் அதன்கண்ணுள்ள வீக்கம் குறையும்," என்றார். இதுகேட்ட அச்சிறுமியார், 'அவ்வாறு செய்ததைக் கேட்டதில்லை; அது செய்வதறியேன்,' என்றார். 'சில மெல்லிய ஆடைகளின் கிழிவுகளைக் கொதித்த வெந்நீரில் நனைத்துப் பிழிந்து, பின் அவற்றை நாயினது காலின்கண் வைத்துக் கட்டுக,' என்றார் குரு. அந்நேரத்தில் அப்பக்கமாய்ச் சென்ற ஒரு பையனது உதவியால் உடனே அவர்கள் தீமூட்டினர். பிளாரன்ஸ் அத்தீயில் நீரைச் சுடவைத்து விட்டு, மேய்ப்பவன் வீட்டில் துணிகள் கிடைக்குமா வெனப் பார்த்தார்; ஆனால், அங்கொரு சிறு கந்தையேனுங் கிடைத்திலது; என் செய்வார்! தம் கைக்குட்டையாயினும் அதற்குப் பயன்படுமா என்றெண்ணினார். ஆனால், அத்துணியும் சிற்றளவினதாகலின் அதுவும் பயன்படாதாயிற்று. ஆயினும், கட்டுவதற்குத் துணி கட்டாயம் வேண்டுமே! ஆகவே, அதனை எவ்வகையிலாயினும் பெறவேண்டுமென்றெண்ணி முயன்றார். அப்போது தம் எதிரே யிருந்த அம்மேய்ப்பனின் சட்டையைக் கண்டு, "இதனை இப்போதே என்பொருட்டுக் கிழியுங்கள்; என் அருமை அன்னை வேறோர் ஆடை அவர்க்குத் திட்டமாய்த் தருவார்," என்று அடங்காக் கிளர்ச்சியுடன் கூறினார். அவரது சொற்கேட்டுக் குருவும் அவளிடமுள்ள அதனை வாங்கித் துண்டு துண்டுகளாகக் கிழித்தார். கிழித்த அத் துணித்துண்டுகளைச் சிறுமியார் ஒன்றுசேர்த்து வெந்நீரில் நனைத்துப் பிழிந்து அந்நாயின் காலில் அதனை மேல்வைத்துக் கட்டினார். கட்டிவிட்டு "அருமை நாயே, யான் உனக்கு உதவி செய்யத்தான் விரும்புகின்றேன்,"

என்று சொல்ல, அந்நாயும் அவர் சொல்லியதைத் தெரிந்து கொண்டது. சூடான துணியை அதன் காலில் வைத்துக் கட்டவே, சூடு பொறாத துன்பத்தால் நாயின் உடல் நடுங்கியது; ஆனாலும், தனக்குத் தன் தலைவி நன்மை செய்கின்றா ரென்பதறிந்து, அஃது அவரைக் கடிக்கவு மில்லை; துன்புற்றுக் கத்தவுமில்லை. இவர் செய்த சிறந்த மருத்துவத்தின் பயனாகச் சிறிது நேரத்துக்குள் நாயின் கால் வீக்கங் குறைந்தது; அயர்வுற்றுச் சுழன்றுகொண் டிருந்த அதன் இரு கண்களிலுமிருந்து துன்பக்குறி மறைந்தது. தாம் செய்ததை உற்று நோக்கிக்கொண் டிருந்த குருவை அவர் ஏறிட்டுப் பார்த்து, "இது முழு நலம் பெறும்வரையில் இதனை நான் விட்டகலமாட்டேன்; ஆதலால் அன்பு கூர்ந்து, நீங்கள் அப்பையனை அனுப்பி யானிங்கிருப்பதை எம் வீட்டவர்க்கு அறிவித்து விடுங்கள்; யானிருக்குமிடம் அறியாராயின் அவர்கள் கவலை யுறுவார்கள்," என்றார். பின் சிறுமியார் மாலைக்காலம் வரையில் அந்நாயுடன் உட்கார்ந்துகொண்டு அதைப் பார்த்தவாறாகவே இருந்தார்.

மாலைக்காலம் அம்மேய்ப்பன், தன் குடிசையை நோக்கி வந்து அதன் கதவைத் திறப்பதற்காகத் தாழ்ப்பாளைத் தடவும் ஓசையைப் பிளாரன்ஸ் கேட்டார். அம்மேய்ப்பன் அந்நாயின் தொண்டையை இறுக்கிக் கொல்வதற்காகக் கையிற் கயிறு கொண்டுவந்திருந்தான். நாயோ தன் தலைவன் எண்ணத்தை யறியாமல் வாலை அசைத்து முனகிக்கொண்டு அவன்பால் தன் மூன்று கால்களுடனும் இடர்ப்பட்டுச் சென்றது; அவனது கட்பார்வை தெளிவில்லாமையால் அவன் அந்நாயின் காலைத் தெளிவாகப் பார்க்கக்கூடவில்லை.

"மேய்ப்பரே! உமது நாய் எத்துணை நலத்துடனிருக்கின்றதென்பதைப் பாரும்; அதன் காலின் வீக்கம் பெரும்



பாலுங் குறைந்துவிட்டது. ஆனால், இன்னுஞ் சில முறை வெய்தான ஒற்றடங்கொடுத்துக் கட்டினால் அது விரைவில் முழு நலம் பெறும்; அவ்வாறு செய்து முடிக்க எனக்கு உதவி செய்ய வாரும்," என்று அழைத்தார்.

இதற்குள் பக்கத்திலுள்ள குடிசைகளைப் பார்க்கச் சென்று திரும்பி வந்த குரு, "நாயின் தலைவனான மேய்ப்பன் அதற்கு இனி வேண்டுவன செய்வான். நாளை அதைப் பார்க்க நீ வரலாம்," என்று அவர்க்குச் சொல்லித் தமது குதிரைமேல் அவரை ஏற்றிக்கொண்டு வீடுபோய்ச் சேர்ந்தார்.

## 3. அம்மையார் இளமைக்காலம்

பிளாரன்ஸ் சிறுமியார் வெளியேயுள்ள அழகிய மரஞ் செடி கொடிகளிடத்தும், வாயற்ற ஏழை விலங்குகளாகிய நாய், குதிரை முதலியவற்றிடத்தும் பேரன்புடையவர். ஆனாலும் இவர் தம் வீட்டில் ஓரிமைப்பொழுதேனும் வாளா யிருந்தவரல்லர். இவரது படிப்புக்கு இடையூறான தொன்றும் நிகழ இவர் பெற்றோர்கள் விடவில்லை. இவர் அருமைத் தந்தையார் இவர்க்கும் இவர் உடன்பிறந்தார்க்குங் கல்வி கற்பித்து வந்தார். அறிவு வளர்ச்சிக் கேதுவான அருமையான நூல்களையுந் தம் பிள்ளைகள் கற்கக் கொடுத்தார்! இன்னும், இவர், பிரெஞ்சு, செர்மன், இத்தாலியன், கிரீக், இலத்தீன் மொழிகளையும், கணக்கையுந் தம் மக்களுக்கு நன்றாய்ப் புகட்டிவந்தார். இதனோடு டெனிசன்[1] என்னும் பாவலர் அமைத்த தீஞ்சுவை மிக்க அருஞ் செய்யுட்களையும், அவர்களுக்குச் சிறப்பாகக் கற்பித்து அவர்கள் அப்பாக்களைப் பெரிதும் விரும்பும்படி செய்தார்.

[1] Tennyson.

இவர் தம் தமக்கையான பார்த்தி என்பார் ஓவியம் வரைவதிலும், இசை பாடுவதிலுந் திறமை வாய்ந்தவர். தமக்கையும் இவரும் தையற் றொழிலையும் நன்றாய்க்கற்று, மெல்லிய ஆடை விளிம்புகளில் நேர்த்தியான பூவேலைகளுங் கண்கவரச் செய்வர்.

இன்னும், பள்ளிக்கூடம் முடிந்தபின்னும், மழை பெய்யும்போதும் இவ்விருவரும் பாவைகள் வைத்து விளையாடுவது வழக்கம். இவர் பாவைகள் வைத்து விளையாடுங்காலும், அவை நோயாயிருப்பனபோலெண்ணி, அவற்றின் முறிந்த கைகால்களைத் தம் தமக்கையைப் பிடிக்கச்சொல்லி, மிகவுங் கருத்தோடு அவற்றை ஒழுங்குபட வைத்து மருந்திட்டுக் கட்டுவார். கட்டியபின், அவை உண்ணத்தக்க அருமையான பத்திய உணவுகளையுஞ் சமைத்துவைப்பார். இவர் "கேப்" என்னும் நாய்க்கு உதவி செய்வதற்கு முன்னமே இங்ஙனம் விளையாடினார். இவர் தம் பிற்காலப் பெருவாழ்வைத் தம் குழவிக் காலத்திலேயே விளையாட்டிற் காட்டிவிட்டார். இங்கே ஒன்று உன்னிக்கற்பாலதுளது :—'விளையும் பயிர் முளையிலே' என்றும், 'தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்றும் போந்த தமிழ்ப் பழமொழிகட் கேற்ப, மக்கள் தம் குழவிக்காலங்களில் விளையாடும் விளையாட்டுக்களி லிருந்தே அவர்கள் தாம் பெரியரானபின் எத்தகையரா யிருப்ப ரென்பதைக் கண்டறியலாம்.

ஆசிரியர் மெய்கண்டார் தாம் மூன்றாண்டுக் குழந்தையாயிருந்தபோதே மணலைக் குவித்து அதனை இறைவனாகக் கருதிப் பூவும் இலையும் இட்டு வணங்குதலையே விளையாட்டாகச் செய்துவந்தார். பின்னர், அவர் பெரியராய் வளர்ந்தபிறகு 'சிவஞான போதம்' என்னும் ஞான நூலை அருளிச்செய்து, தமிழ் நாட்டில் ஒப்புயர்வற்ற ஞானாசிரியராய்த் திகழ்ந்தாரல்லரோ?



ஜான் ரஸ்கின்[1] என்னும் ஆசிரியர் தமது மூன்றாம் ஆண்டிலேயே ஆங்கில மொழியிற் பாடல்கள் அழகுறப் பாடி விளையாடினார். பின்னர், அவர் பெரியராகி ஆங்கில மொழியில் இயற்றியிருக்கும் மிக அழகிய ஓவிய ஆராய்ச்சி உரை நூல்களின் புகழ் உலகமெங்கும் பரவி விளங்குகின்றதன்றோ?

பிளாரன்ஸ் நைட்டிங்கேலும், அவர்தம் தமக்கையாரும் பெரியவர்களானபிறகுந் தம் பெற்றாரோடு அடிக்கடி வெளியூர்களுக்குப் போவதுண்டெனினும், இளையவரான பிளாரன்ஸ் நைட்டிங்கேல் மட்டும் வெளியூர்களுக்குப் போவதைவிடத் தம் ஊரிலிருந்து தம் ஊரவர்க்கு உதவி செய்வதிலேயே கருத்துடையவரா யிருந்தார்.

இவர் தம்மிடத்திலுள்ள நிழலுருக் கருவி[2] யால் தம் ஊர்ப்பிள்ளைகளை நிழலுரு எடுத்து, அப்படங்களுக்குக் கண்ணாடிச் சட்டமிட்டு அவர்களின் பெற்றோர்க்குத் தர, அவர்கள் அவற்றைத் தம் அறைச் சுவர்களிற் றொங்கவிட்டு வைத்துப் பார்த்துப் பார்த்து மகிழ்வார்கள். இவ்வாறு இவர் அயலார் பிள்ளைகளை நிழலுரு எடுப்பது, அவர்தம் பெற்றோர்க்கு இவர்பால் எத்துணை மிகுந்த அன்பினை விளைவிப்பதாகும்! அவ்வூரவ ரெல்லாரும் இவரது வருகையைக் கண்டவுடன் பெருங்களிப்பு எய்துவர்; இவர்களில் நோயாளிகளா யுள்ளவர்களோ இவரது வருகையைப் பேராவலோடு எதிர்பார்ப்பர்.

இவர் அவர்களுக்கு எந்த உதவியைச் செய்தாலும் மிக அமைதியாய்ச் செய்வார்; மிகுதியாய்ப் பேசாமலும், ஆரவாரஞ் செய்யாமலும், நோயாளிகளுக்கு எவ்வாறு செய்தால் நோய் நீங்குமோ அவ்வாறே நுட்பமாய்ச் செய்து நோய் நீக்குவார். இவ்வாறு அன்பாயும் அமைதி

[1] John Ruskin. [2] Photo Camera.

யாயுஞ் செய்வதால் இவரது வருகையைக் காணும்போதே நோயாளிகள் தாம் அரைவாசி நோய் தணியப் பெற்றதாக எண்ணுவார்கள். அவர்களுக்குச் செய்யவேண்டியவைகளை யெல்லாம் மலர்ந்த முகத்தோடு செய்துவிட்டுத் தாம் தம் இல்லத்திற்குத் திரும்பி வரும்போதும், அந்நோயாளிகள் விரும்பத்தக்க அல்லது கேட்டு நகைக்கத்தக்க சில நல்ல கதைப் புத்தகங்களைப் படித்து அவர்களை இன்புறுத்தலுஞ் செய்வார். இவர் கல்வி பயிலுங் காலத்திலும் டெர்பிஷையர், ஆம்ஷையர் என்னுந் தம் இரண்டு ஊர்களிலுமுள்ள இளைஞர்கள் இசை கற்பதற்காக ஒரு பள்ளிக்கூடம் அமைத்தார். (இன்றும் அது நடைபெறுகின்றது.) இங்ஙனமே மற்றவர்கள் எல்லாரும் நோயின்றி இனிது வாழவேண்டுமென்னும் ஆவலும் உடன்கொண்டார். தம் உதவி வேண்டியவர்க்கெல்லாம் அவ்வுதவியை மறுது உடனே செய்தார்; மறுது செய்ததுமல்லாமல் அதனைச் செய்வதில் உவந்த உள்ளமுங் கொண்டார்.

நடிப்பதிற் பெருந்திறனுடைய நாடகக்காரர்களும், உலகின்கணுள்ள இயற்கைக் காட்சிகள், அழகிய மக்கள் வடிவுகள் முதலியவற்றைத் திறம்படச் செவ்விதின் வரைந்து காட்டும் ஓவியக்காரர்களும், மிக எளிய முறையில் நோய் நீக்கும் மருத்துவர்களும், கொடிய விலங்குகளையும் நச்சுப் பாம்புகளையும் இசையால் தம்வழிப்படுத்தும் இசைவல்லுநர்களும், தம் ஊழ்வினையின் பயனால் அத்தகைய திறம்பெற்றார்களேயல்லாமல், தாமே தம்முயற்சியால் அப் புலமைகளை வருவித்துக் கொண்டவரல்லரென்று உலகத்தார் கூறுவதுண்டு. இஃது ஒருவகையில் உண்மையே என்றாலும், நாடகக்காரராயும், ஓவியக்காரராயும், இசைவல்லுநராயும், மருத்துவராயும் வந்தோர் பலர், பல்லாண்டுகள் பொறுமையுடன் பேருழைப்பெடுத்துப் பயின்று பழகி, அதன் பின்னரே



தான் அத்தகைய நிலையினராயினரென்பதும் நாமறியோமல்லமோ? மேற்குறிப்பிட்ட கற்றறிஞர்களில் ஊழ்வினையால் அறிவுடையராவாரும் தம் அறிவாலும் பெருமுயற்சியாலும் அறிவுடையராவாரும் என இரு பகுப்பினர் உண்டு. எழுதமட்டுந் தெரிந்த சிறுவனொருவன் திடீரெனச் செய்யுளிலக்கணஞ் சிறிதும் பிறழாமற் சொற்சுவை பொருட்சுவை நிரம்பிய பாடல்களை அமைப்பனாயின், அஃது அவன்றன் ஊழின் பயனாய் நிகழ்ந்ததென்று சொல்லுதல் பொருந்தும். ஆனால், இத்தகையோர் சில காலங்களில் மிகச் சிலராகவே காணப்படுவர். பொதுவாக உலகிற் காணப்படும் பெரும்பாலரான பேராசிரியர்களெல்லாருந் தம் அறிவாலும் உழைப்பாலும் இறைவனருளாலுமே பெரியராகிச் சிறந்து விளங்கினர்; விளங்குகின்றனர். இவ்வுண்மையைப் பிளாரன்ஸ் நைட்டிங்கேல் அம்மையார் நன்கறிந்தவர்.

ஊழ்வினைப் பயனாற் பெரியராதல் மிக அரிது என்பதும், தம் அறிவினாலும் பேருழைப்பினாலும் மக்கள் சிறந்த நிலையை எய்துவதே மிகுதி யென்பதும் பிளாரன்ஸ் நைட்டிங்கேல் நன்கறிந்தார். அறிந்து, தம் பேரறிவைச் செலுத்திப் பெரிதும் முயன்றதன் பயனாயன்றோ, இக்காலத்துப் பெண்மணிகள்கூடச் செய்யாத அரும்பெருஞ் செயல்களையும் அவர் செய்தார்? இவர், நோயாளர்களைக் கருத்தாய்ப்பார்த்து நலப்படுத்துவதிலேயே தம் வாழ்நாள் முழுவதையும் ஒப்படைக்க எண்ணி அந்நோயாளிகளில் நோய் நீங்குவதற்குச் செய்யவேண்டுஞ் சிறந்த பல முறைகளையுங் கண்டறிய முயன்றார். வேலைக்காரனொருவன் தன் வேலையைத் திறமையாகச் செய்தற்கு ஏற்றபடி தன்னை எத்துணை மிகுதியாகப் பயிற்றிக்கொள்வானோ, அத்துணை மிகுதியாக இவருந் தமது மருத்துவத்தொழிலுக்குத் தக்கபடி தம்மைப் பண்படுத்திக்கொள்ள முனைந்தார்.

## 4. மருத்துவப் பயிற்சி

இவரது காலத்தில் ஆங்கில நாட்டுச் செல்வக் குடிப் பெண்கள் பதினெட்டாண்டினரானால், கல்வி கற்பதை விட்டு வேடிக்கை விளையாட்டுக்களிற் காலங்கழிப்பது வழக்கம். ஆனால், நைட்டிங்கேல் அம்மையாரோ தம் இளமைக்காலத்திலேயே வேடிக்கை விளையாட்டுக்களை வெறுத்துக் கல்வி கற்பதிலும், பிறர்க்கு நன்மை செய்வதிலும் முனைந்து நின்றார். இவர் தமது பதினெட்டாம் ஆண்டில் தம் தந்தையாரால் இலண்டன்மா நகரத்திலிருக்கும் விக்டோரியா அரசியார்க்கு அறிமுகப்படுத்தப் பட்டார். அப்போது அந்நகரப் பெருமாட்டிகள் பலர் அம்மையாரை வாழ்த்தினார்கள். அதே காலத்தில் இவர் சில திங்கள் இலண்டன் மாநகரத்திலுள்ள மருத்துவக் கழகங்களிலிருந்து வேலை கற்கத் துவங்கினார். அவ்விடங்களில் இவருடைய கருத்தான பார்வையும், கைத்திறமையும், இவர் தம் நாட்டுப்புறத்தாரிடத்துப் பழகிய பழக்கமும் பெயர்போன மருத்துவர்களுக்கும் உதவியாய் நின்றன. தாமெடுத்த முயற்சியை ஒழுங்காகத் துவங்கி நடத்துதலே ஒருவர் சிறந்த நிலையை அடைதற்கேற்ற வழியாகுமென்று இவர் துவக்கத்திலேயே எண்ணினார். அழுக்கும் புழுதியும் நிறைந்த தரைகளில் நோயாளிகளிருப்பராயின், அவற்றின் தூசி அவர்களுடைய மூக்கு வாய்களின் வழியாய்ச் சென்று அவர்களுக்கு இருமலை உண்டுபண்ணுமென்பது அறிந்து, இவர் அவர்களுக்கு ஏதுஞ் செய்வதற்குமுன், தம் மருத்துவக் கழகத்தில் தூசி சிறிதும் படியவிடாமல் துப்புரவு செய்வார்.

இவர் இலண்டனிலிருந்து பயின்றபோது அந்நகரில் நடக்கும் விருந்து திருவிழா முதலியவற்றிற்குச் சென்று பொழுது போக்குவதை விடுத்து, அந்நகரிலுள்ள மருத்துவச் சாலைகட்கும், கல்விச் சாலைகட்கும், அவற்றின் முன்னேற்றத்திற்காகக் கூடுங் கழகங்கட்கும் போய் வருவர். இவர் இலண்டனிலிருந்து பயின்றபிறகு எடின்பரோ,[1] டப்ளின்[2] முதலிய ஊர்கட்குச் சென்று, பின் பிரான்சு[3], இத்தாலி[4] என்னும் இரண்டு நாடுகட்குஞ் சென்றார். பிற்கூறிய நாடுகளில் நோயாளிகளைப் பார்ப்பவர்கள் மணமாகாக் கன்னிப்பெண்களாயிருந்தனர். அதன் பிறகு, இவர் சேர்மனி[5] என்னும் பெரிய நாட்டிற்குச் சென்றார். 1851-ஆம் ஆண்டு ஆங்குள்ள, ரைன்[6] ஆற்றங் கரையிலிருக்கும் கெய்சர்வெர்த்[7] என்னுமிடத்தில் தாம் பெறவேண்டியதைக் கண்டுகொண்டார்.



அந்நகரத்தில், பிலீட்னர்[8] துரையாலும் அவர் மனைவியாராலும் 1836-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட மருத்துவச் சாலை ஒன்றிருந்தது. அதில் இவ்வம்மையார் தமது மருத்துவப் பயிற்சியைத் துவங்கத் தீர்மானித்தார். இக்காலத்தில் இலண்டன்மா நகரத்தில் சிறந்த பல்பொருட் காட்சிச் சாலை[9] ஒன்று ஏற்படுத்தப்பட்டது. ஐரோப்பாக் கண்டத்தார் அனைவரும் அதனைப் போய்ப் பார்த்துக்கொண்டு சில காலம் மகிழ்வாய் ஓய்ந்திருந்தனர். ஆனால், பெருஞ் செல்வக் குடியிற் பிறந்த நம் அறிவுடைப் பெருமாட்டியோ அதற்குப் போகாமல் செர்மனியிலுள்ள கெய்சர்வெர்த்தின் மருத்துவச் சாலைக்குச் சென்றார்.

இவ்வம்மையார் அம்மருத்துவச் சாலைக்குச் சென்றிருந்த காலத்தில், அது பல கிளைகளாகப் பகுக்கப்பட்டிருந்தது. அதன் ஒரு பக்கத்தில் ஒரு பள்ளிக்கூடமும் வைக்கப்பட்டிருந்தது. அதிற் பயிலும் பிள்ளைகளுக்கு மணமாகாப் பெண்கள் கல்வி கற்பித்து வந்தனர். அப்

[1] Edinburgh. [2] Dublin. [3] France. [4] Italy. [5] Germany
[6] Rhine, [7] Kaiserswerth, [8] Fleidner.
[9] The First great International Exhibition.

பள்ளிக்கூடத்திற் புகுந்தபின், ஒவ்வொருவரும் மருத்துவ வேலைக்கோ, ஆசிரியர் வேலைக்கோ செல்பவர்களா யிருந்தாலும் ஒரே வகையான பாடங்களையே கற்கவேண்டியவரா யிருந்தார்கள். எல்லாருந் தைக்கவும், சமைக்கவும், இடங்களைத் துப்புரவாகக் கழுவவும், தெளிவாய் இனிதாய்ப் படிக்கவும் நன்றாய்ப் பயின்றிருக்கவேண்டும். ஆனால் புதிதாகச் சென்ற பிளாரன்ஸ் அம்மையாரோ தாம் சிறுமியாயிருந்த காலந்தொட்டே, இவற்றையெல்லாந் தமது இல்லத்தின்கண் நன்கு பழகி யிருந்தாராகலான், அப்பயிற்சிகளை மிக எளிதாய்க் கற்றார். அதனால், இவர் விரைவிற் பள்ளிக்கூடத்தைவிட்டகன்று, மருத்துவச் சாலையில் நோயாளிகளைச் செவ்வனே பார்க்க விடை கொடுக்கப் பெற்றார். அவருடனிருந்த மருத்துவப் பெண்கள் செர்மானியாவைச் சேர்ந்த நாட்டுப்புறத்தவர்களாவர். பிளாரன்ஸ் அம்மையார் செர்மன் மொழி பேசக் கற்றுக்கொண்டமையால் அப்பெண்கள் விரைவில் அவரோடு பழகலாயினர். மருத்துவச் சாலையிலிருந்து வேலை செய்தபின்னர் ஓய்ந்த நேரங்களில் பிலீட்னர் என்னுந் துரைமகனாரோடு அவ்வூர் நாட்டுப்புறங்களுக்குச் சென்றார்; சென்று, அங்குள்ள ஏழை மக்களுக்கு உதவியுஞ் செய்தார். தாம் உதவி செய்த நோயாளிகள் துப்புரவாகவும் வசதியாகவும் வைக்கப்பட்ட பின்னர்தான் இவர் தமது இல்லந் திரும்புவார். அம்மையார் அங்கிருந்த மூன்று திங்களுக்குள் நோயாளிகளுக்கு வேண்டுவனவற்றை அல்லும் பகலும் மிக அன்பாயுங் கருத்தாயுஞ் செய்து மருத்துவச் சாலையை நடாத்தும் முறைகளைத் திறம்படக் கற்றறிந்தார். "பெருஞ் செல்வக் குடியிற் பிறந்த இவ்வம்மையார் தம் செல்வ நிலையை ஒரு பொருட்படுத்தாமல் நோயாளிகளுக்குச் செய்யவேண்டியவற்றை மிக நுட்பமாயுந் திறமையாயுங் கற்றுத் தேறினார்.



கூர்ந்த அறிவும் ஓயா முயற்சியுமுடைய இந்நங்கை போல்வார் வேறெவருமிலர்," என்று அம் மருத்துவச் சாலைத் தலைவர் கூறியிருக்கின்றார்.

கெய்சர்வெர்த்திலுள்ள மருத்துவச் சாலையில் அறுத்துத் தீர்க்குங் கருவி முறைகளைக் கற்க இவர் இடம் பெற்றிலர். ஆதலால், இவர் இற்றைக்கு இருநூறாண்டுகளுக்கு முன்னே பாரிஸ்[1] மாநகரத்தில் நிறுவப்பட்ட கன்னிப்பெண் மருத்துவக் கழகத்திலுள்ள மாதர் குழுவிற் சேர்ந்து அக்கருவி முறைகளைப் பயிலத் துவங்கினார். பயின்றதுமன்றி, இவர் அம்மாதர்களோடு வெளியே போய் நோயாயுள்ள எளிய மக்களுக்குப் பேருதவியுஞ் செய்துவந்தார். இன்னும் இவர் அவ்வேழை மக்களுக்குப் பணச்செலவு வைத்து அவர்களை இரவலராக்கிவிடாமல், அவர்களுக்குச் செலவின்றியே எல்லா உதவியுஞ் செய்துவந்தார். நோயாளிகளைப் பார்க்கும் ஒவ்வொரு வேலையும் இவரது உள்ளத்தைக் கவர்ந்தது.

ஆனாற் பல திங்கள் தொடர்பாக மேற்கொண்ட பேருழைப்பாலும், முன் பழகிய உணவுக்கு மாறானவற்றைக் குறைந்த அளவில் உட்கொள்ள நேர்ந்தமையாலும் இவர் தம் உடல் நலத்தை இழக்கலானார். இவர் நோயாற் படுக்கையிலிருந்தபோது அம்மருத்துவச் சாலை மாதர்கள் இவரைக் கருத்தாய்ப் பார்த்தனர். நோயில்லாத காலங்களிற் கற்றறிந்ததைவிடத் தாம் நோய்ப்பட்டிருந்த காலங்களிலே தாம் நோய் தீர்க்கும் முறைகளை மிகுதியாய்த் தெரிந்துகொண்டார். இவர் திரும்ப உடல் வலிமை பெறுதற்குச் சிலகாலமாவது ஓய்ந்திருக்க வேண்டுவது இன்றியமையாததாயிற்று. ஆகவே, இவர் மறுபடியும் தம் ஊரான எம்பிலிக்குச் சென்றார். அதன்பின் லீஆலுக்குச் சென்றிருந்தார். ஆங்குத் தாம் நோய் ஒன்று உலகில்

[1] Paris

இருப்பதாக நினைப்பதையே அறவே மறத்தல் வேண்டு மென்று முயன்றார்.

அப்போது, இலண்டன் மாநகரில் செல்வப் பெருமாட்டி களுக்காக முன்னமே ஏற்படுத்தப்பட்டிருந்த மருத்து வச் சாலையில் அம்மையாரது உதவி இன்றியமையாது வேண்டி யிருந்தது. ஏனெனில், அம்மருத்துவச்சாலை பொருள் முட்டுப்பாட்டாலும் மேற்பார்வைக் குறைவி னாலுஞ், சீர்கெட்டிருந்தது. ஆதலால், இவ்வம்மையார் 1853-ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் அதற்குத் தலைவி யாக அமர்த்தப்பட்டார். அமர்த்தப்பட்டபின், அம்மை யார் அதனை மிகச் சிறிய நிலைக்குக் கொண்டுவந்தார். சீமாட்டிகள் பலர் அதற்குப் பொருள்மட்டுங் கொடுத்து உதவி புரிந்தார்கள். ஆனால், பெருஞ் செல்வியாரான நைட் டிங்கேல் அம்மையாரோ தம் உடம்பினுழைப்பால் அல்லும் பகலும் நோயாளிகளுக்குப் பேருதவி செய்தார். இதுவுமன்றி, அம்மையார் அம்மருத்துவச் சாலையின் தலைவியா யமர்ந்தமையின், அங்குள்ள எல்லா வேலைகளை தாமே பொறுப்பாய்ச் செய்ய வேண்டியவரானார்.

இதனால், இவர்தம் உடனிலைக்குப் போதுமான அளவு இளைப்பாற மக்கள் இடந்தந்திலர். சில நாட்களில் இவர் தம் உதவி இன்றியமையாது வேண்டப் படுகின்றதென் றெழுதிய கடிதங்கள், பல இடங்களிலுமிருந்து இவர்க் குக் கட்டுக் கட்டாய் வந்து குவிந்தன. அறிவாற்றலும், உதவி செய்யும் நல்லெண்ணமும் உடையார்க்கு எந்த இடத்திலிருந்தாலும் ஓய்வு கிடைப்பதில்லை யன்றோ? ஆகவே, இவர் தமது உடல்நலம் இடங்கொடுத்தமட்டில், மிக அருமையான உதவிகளைச் செய்து, மற்றையோர் பிழைபடச் செய்தவைகளையுந் திருத்தி முடித்தார். அத னால் இவரது உடல்நலம் மறுபடியும் பழுதுபட்டது. இது நிற்க.

## 5. கிரிமியாப் போர்

1854-ஆம் ஆண்டு பங்குனித் திங்களில் இங்கிலாந்து பிரான்சு, துருக்கி ஆகிய நாட்டினர் ஒரு பக்கமாகவும், ருஷிய நாட்டினர் மற்றொரு பக்கமாகவும் நின்று பெரும்போர் துவங்கினர் கிரிமியா[1] என்னுந் தீவின் குறையில்[2] இப்போர் நடைபெற்றது.

இருபக்கமும் போர் மும்முரமாக நடந்தது. மூந் நாடுகளும் ஒன்று சேர்ந்து செய்த போர் வெற்றிபெற்றது. படைத்தலைவன் ஒருவன் தந்த தவறான ஆணையால் லைட்பிரி கேட்[3] ஆகிய அப்பெரும்படையின் ஒரு பகுதி ருஷியரை எதிர்க்கச் சென்றது. ருஷியரோ மிக்க திறமையோடு அப் படையைத் தாக்கி, நூற்றுக்கணக்கான ஆட்களை வெட் டிச் சாய்த்தனர். அந்நேரத்திற் பெருமழை பெய்தது. குளிரின் கொடுமையோ மிகுதியா யிருந்தது! அப்போது மறைந்து நின்று சண்டை செய்வதற்கென வெட்டப்பட்ட நீண்ட பெருங் கால்வாய்களில் தலைபோயுங் கைகால் முறிந்துங் குவியலாய்க் கிடந்து தத்தளிக்கும் படைஞர் களின் மேல் மழைத்தண்ணீர் பாய்ந்தது. இயற்கையில் உடலுறுப்புக்க ளறுபட்டு, உண்ண உணவுமின்றி அக் குளிரால் நடுக்குற்றுத் தத்தளித்த இவர்களுக்குச் செவ் வையான உணவும் உடையுந் தருமாறு குத்தகைக்காரர்[4]க்குப் பெரும் பொருள் கொடுக்கப்பட்டது. ஆனால், அவர்கள் இரக்கஞ் சிறிதுமின்றிப் பயனற்ற உணவுப் பண்டங் களையும் கெட்டுப்போன உடைகளையுங் கொணர்ந்து அப்படைஞர்களுக்குப் பயன்படாவாறாய்த் தந்தனர். தாம் பெற்ற பெரும் பொருளில் ஒரு சிறு பகுதிமட்டுமே அத் துன்புறும் வீரர்களுக்குச் செலவு செய்து, எஞ்சிய பெரும் பொருளைத் தமக்கென எடுத்துக்கொண்ட அக்குத்தகைக்

[1]Crimea. [2]Peninsula. [3]Light Brigade. [4]Contractors.

காரர் வன்னெஞ்சங் கல்லினுங் கடியதோ அன்றி இரும்பி
னுங் கடியதோ அறிகிலம்! அப்போர்க் களத்திலிருந்த
மருத்துவர்களோ படைஞர்களைப் பெரும்பாடு பட்டுப்
பார்த்தனர். ஆனால், இம்மருத்துவர் தொகை மிகச்
சிறிதாயிருந்தமையாற் பெருந்தொகையினரான படைஞர்
கள் அனைவரையும் அவர்கள் கருத்தாய்ப் பார்க்க ஏலாத
வராயினர். இவர்களுக்கு உதவியாக அங்கு மருத்துவ
மாதரும் எவரும் இல்லை. ஆண்மக்கள் ஒருவர்க்கொருவர்
எவ்வளவு உதவி செய்யக்கூடுமோ அவ்வளவே செய்து
கொண்டார்கள்: உதவிசெய்ய வருவோர் தமக்கும் பல
வேலைகளிருந்தமையாற் போர்க்களத்திலிருக்கும் அனை
வரையுஞ் செவ்வனே கருத்தூன்றிப் பார்க்க அவர்கட்கு
இடம் வாய்த்திலது. இதுவுமல்லாமல், போரில் வெட்டுப்
பட்டு வருந்தும் நோயாளிகளைத் திறமையாகப் பார்க்கப்
பழகிய அறிவிற்சிறந்த மாதர்கள் இல்லையாயின் அவர்கள்
யாது செய்யக்கூடும்? மருத்துவத்திற் பழகிய பிரான்சு
மாதரார் சிலர் அங்கு உதவி செய்யும் பொருட்டு வந்தன
ராயினும், அவர்கள் தம் ஊரவர்கட்கே உதவி செய்ய
நேரம் போதாதாயிற்று: நேரங் கிடைத்திருப்பின், மற்
றவர்களுக்கும் உதவி செய்திருக்கலாம்; ஆங்கிலப் படை
ஞர் ஒருவரிருவர் தம் மனைவிமாரோடு வந்திருந்தனர்.

காயம்பட்ட அப் படைஞர்களைக் கொணர்ந்து கொத்
தளங்களின் வழிகளிலே வரிசை வரிசையாகப் படுக்க
வைத்திருந்தனர். இவர்களுக்கு அம்மாதர்கள் உணவு
சமைத்துக் கொடுத்துப் பார்த்தனர். அவர்கள் புண்பட்ட
காயங்களைக் கட்டுவதற்குத் துணிகள் கூடக் கிடைத்தில.
இரங்கத்தக்க இந் நிலைமையினைக்கண்ட இப்பெண்மணி
கள் இலண்டன்மா நகரத்திலுள்ள தம் நண்பர்களுக்குப்
போர்க்களத்திற் காயம்பட்ட போர் வீரனிலைமையை
அறிவித்துக் கடிதங்கள் எழுதினர்; காலஞ் சிறிதுந்



தாழாமற் றமக்கு உடனே தக்க உதவி அனுப்பப்படல்
வேண்டுமென்றும் பணிந்தெழுதிக் கேட்டனர். போர்ச்
செய்திகளை எழுதி அனுப்புவோரும் அங்ஙனமே காய
மடைந்த படைஞரின் இரக்கமான நிலையினைத் தெரி
வித்து வந்தனர். கிரிமியாப் போர்க்களத்திற் கடுங்காயம்
பட்டுப் பட்டினியும் பசியுமாய்ச் சாவக்கிடக்கும் நூற்றுக்
கணக்கான அப் போர்வீரர்களின் துன்ப நிலைகள் புதினத்
தாள்க[1]ளிலும் வெளிப்படுத்தப்பட்டன. இவ் இரக்கச்
செய்தியை அறிந்த பெண்மக்கள் பலர், "போர் நிகழும்
இடத்திற்குப் போய்ப் போர்க்களத்திற் கிடந்து
துன்புறும் படைஞர்களுக்கு உதவி செய்ய விழைகின்
றோம்," என்று பரிந்து கேட்டனர். இதுகண்ட சிட்னி
எர்பர்ட்[2] என்னும் போர் அமைச்சர் "கிரிமியாப் போர்க்
களத்துக்குப் போகக் கருதும் இப்பெண்கள் மருத்துவஞ்
செய்வதிற் பழகியவரல்லர்; ஆனால் இவர்களுக்கு உதவி
செய்ய வேண்டுமென்னும் பேரவாவோ மிகுதியா யிருக்
கின்றது. இவர்கள் அறிவுடைய தலைவி ஒருத்தியின்
சொற்படி நடப்பாராயின் நன்றாகப் பயன்படுவர்" என்
றெண்ணினர். ஆனால் அத்தகைய தலைவி எங்குக் காணப்
படுவளென்று நினைத்துப் பார்த்தார். திடீரெனப் பிளா
ரன்ஸ் நைட்டிங்கேல் அம்மையாரது நினைவு அவர்தம் உள்
ளத்தே தோன்றியது.

உடனே அக்டோபர் பதினைந்தாம் நாள் சிட்னி எர்பர்ட்
என்பார் பிளாரன்ஸ் அம்மையார்க்குப் போர்க்களத்தி
னிலைமையினை நன்றாக விளக்கி ஒரு கடிதம் எழுதினார்.
அதில் அவ் அம்மையார் மருத்துவப் பெண்மக்கள் கூட்
டத்தினர்க்குத் தலைவியாய் அமர அரசியலார் விரும்பு
கின்றனரென்றும், அவர் தாம் வேண்டியவா றெல்லாந்
தலைமை நடத்தலாமென்றுந் தெரிவித்தார். அக்கடிதங்

1. Newspapers. 2. Sidney Herbert.

கண்ட அன்றே அவ் அம்மையார் தாம் கருங்கடலுக்குப் போக இசைந்திருப்பதை எழுதித் தெரிவித்தார். இனிச் சிறிதுங் காலந்தாழ்த்தல் ஆகாமையால், தம்முடன் வருதற்கு இசைந்த முப்பத்தெட்டுப் பெண்களையும் அழைத்துச் செல்வதற்குமுன், அவர்களெல்லாரும் மருத்துவத் தொழிலிற் சிறிதளவாவது பயின்று பழகியவரா யிருத்தல் வேண்டுமே யெனக் கருதினார். ஆகவே, இங்கிலாந்திலுள்ள உரோமர் கோயிலிலும் ஏனைக் கிறித்துவர் கோயிலிலும் உள்ள கன்னிப்பெண்கள்பாற் சென்றார். அங்குத் தம்முடன் வர இசைந்தவர்கள் பலரில் உடல் வலிமையும், அறிவாற்றலு முடையவர்களையே தெரிந்தெடுத்தார். எஞ்சியவர்களை அவர்தம் நேசர்கள் அனுப்பிவைத்தனர்.

சிட்னி எர்பர்ட் துரைமகனார் கடிதமெழுதி ஆறு நாட்கள் கழிந்தவுடன், பிளாரன்ஸ் அம்மையார் மருத்துவ மாதர் குழாத்துடன் கருங்கடற்[1] பக்கஞ் சேர்ந்தார். அக்கடற் பயணத்திற் பெரும்பாடுபட்டுப் பின்னர்ப் பாஸ்பரஸ்[2] என்ற கடலிணைக் கால்வா[3] யின் பக்கத்தேயுள்ள ஸ்குட்டாரி[4] என்னும் மருத்துவச்சாலையை அடைந்தனர்.


இக்கட்டிடம் ஒரு குன்றின்மேலுள்ளது; மிகப் பெரியது; ஆயிரக்கணக்கான மக்களிருப்பதற்கு ஏற்றது; துலுக்கர்களால் இரவலாகக் கொடுக்கப்பட்டது. ஆனால், இக்கட்டிடம் மக்கட் புழக்கமின்றி வெறுமையாய்க் கிடந்தமையின், அஞ்சத்தக்கவாறு அழுக்கும் புழுதியும் நிறைந்திருந்தது. கிரிமியாவிலிருந்து கப்பல் வழியாகக் கொண்டு வந்தகாயம் பட்டவர்கள் இருப்பதற்கும் வசதியற்றதா யிருந்தது.

அங்ஙனம் வந்தவர்களின் முறிந்த கைகால்களை ஒழுங்குபட வைத்துக்கட்டி மருந்திடுவதற்குக்கூட அங்குள்ள மருத்துவர் சிலர் நேரம் பெற்றிலர் காயங்களை

[1] Black Sea. [2] Bosphorus. [3] Strait. [4] Scutari.



உடனே கழுவித் துப்புரவு செய்யாமையால், ஐயகோ! அப்புண்களில் அழுக்கு நுழைந்து அவர்கள் செந்நீரை (இரத்தத்தை) நஞ்சாக்கி அவர்களிற் பலரை இறக்கச் செய்தது. இன்னும் பலர்க்கு உணவுகூடக் கிடைத்திலாமையின் கப்பலிலிருந்து இறக்கப்படும்போது அவர்கள் அதிலிருந்து மருத்துவச் சாலைக்குச் சிறிது தொலைவுகூட நடந்து செல்ல ஏலாது துடித்தனர். இவ்வளவு பெரும்



ஸ்குட்டாரி மருத்துவச்சாலை.

பாடுபட்டு அவர்கள் மலைமேலுள்ள ஸ்குட்டாரி மருத்துவச் சாலைக்குக் கொணர்ந்து சேர்க்கப்பட்டார்கள்! ஆனால், அங்கு எத்தனை நோயாளிகள் இருந்தனரோ அத்தனை எலிகளுங் கூட்டங் கூட்டமாயிருந்து அவர்களைத் துன்புறுத்தின.

# 6. ஸ்குட்டாரி மருத்துவச்சாலை

அம் மருத்துவச் சாலையில் அழுக்கும் புழுதியும் அளவுக்கு மிஞ்சி இருந்தமையின், அதிலுள்ள பழுதான கணக்கற்ற தட்டுமுட்டுக்களை அப்புறப்படுத்தி, நீரைக் கொதிக்க வைத்து அதனால் தரையைத் துப்புறவாகக் கழுவி, அதன்மேற் படுக்கையிட்டுக், காயம் பட்டவர்கள் மேல் தூய ஆடை போர்த்து வசதியாயிருக்குமாறு செய்வதே முதலில் ஆக வேண்டியிருந்தது. இவ்வளவு மிகுதியாயுள்ள அவ் வேலைகளையும் ஆண்பால் மருத்துவர் சிலர் செய்தல் கூடுமோ; கூறுமின்கள்! அம்மையார் இம்மருத்துவச் சாலைக்கு வந்த காலையில் அங்கிருந்த அளவிலாச் சீர்கேட்டின் பயனாக நூற்றுக்கு நாற்பத்திரண்டுபேர் இறந்தனர். அம்மையார் வந்து அவ் வேலையை ஏற்ற பின்னர் நூற்றுக்கு இரண்டு பேர்தாம் இறந்தனர்.

வேலை மிகுதியால் களைப்படைந்திருந்த மருத்துவர்கள் அங்குவந்த பிளாரன்ஸ் அம்மையாரையும் அவர்தம் கூட்டத்தாரையும் அன்புடன் வரவேற்கவில்லை. இன்னும், மருத்துவக் கழகங்களிலுள்ள மாதர்கள் அங்குள்ள வேலைக்கு உதவியாகாமல் அவற்றிற்கு இடைஞ்சல் விளைவிப்பவராயும் இருந்தமையாற், புதிதாகவந்த இம் மாதர்களிடத்திலும் இவர்கட்கு விருப்பமும் நம்பிக்கையும் உண்டாகவில்லை. என்றாலும், பிளாரன்ஸ் அம்மையார் அவர்களிடமிருந்து வந்த அன்பற்ற சொற்களையுங் கொடும்பார்வைகளையும் ஒரு பொருட்படுத்தவில்லை.

“ அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை ”

என்ற தெய்வத் திருவள்ளுவர் உரைப்படி, தம்மை இகழ்வாரைப் பொறுத்தலும், தமக்கு இன்னா செய்தார்க்குந் தாம்



இனியவே செய்தலும் நற்குணங்களுக்கு உறையுளாய்த் திகழ்வாரது இயற்கையல்லவோ? நைட்டிங்கேல் அம்மையார் தம்மை யிகழ்ந்தாரைப் பொறுத்ததல்லாமலும் அவர்க்குத் தாம் இனிய உதவிகளுஞ் செய்ததை நினைத்துப் பார்க்குங்கால்,

“ இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு ”

என்ற அத் திருக்குறளின் அருளுரைக்கு இலக்கிய மாவார் உலகத்தில் இல்லாமற்போகவில்லை என்பதும், அவர் அத்திபூத்தாற்போல் உலகத்தைக் கடைத்தேற்றுவதற்கு இடையிடையே தோன்றுவரென்பதும் இனிது விளங்குகின்றன வல்லவோ?

இன்னும், பிளாரன்ஸ் அம்மையார் சீர்கெட்ட நிலையிலிருந்த அம்மருத்துவச் சாலையை ஒழுங்குபடுத்தும் பொருட்டு, தமது வேலையை மிக அமைதியுடன் பெருமை பாராட்டிக் கொள்ளாமலே செய்துவந்தார். இவ்வாறு செய்து வந்ததால் அங்கிருந்த தாறுமாறான நிலைமையினை அறவே ஒழித்து ஒழுங்கான நிலைமையினை உண்டு பண்ணினார். அம்மையார் அங்குவந்த மூன்று திங்களுக்குள் உதவிபுரியுங் கழகங்களுக்கு நோயாளிகளின் நிலைமைகளைத் தெரிவித்தெழுதிப், பத்தாயிரம் மேற்சட்டைகளை வருவித்து அவர்களுக்குத் தந்தார். அம்மையார் தமக்குச் செய்துவரும் பெருநலத்தைக் கண்டதும், “யாம் நலமடைவோம்” என்னும் முன்னில்லாத ஒரு நம்பிக்கை அந்நோயாளிகளின் உள்ளத்தில் எழுவதாயிற்று.

அம்மையாரைப் புகழாத நோயாளி எவரும் அங்கில்லை. “நைட்டிங்கேல் அம்மையார் வருவதற்குமுன் இம்மருத்துவச் சாலையிற் சினந்துரைக்கும் இன்னாச் சொல்லும், அடாச் செயல்களு மிருந்தன; அம்மையார்


வந்த பின்னரோ, இவ்விடம் இப்போது தெய்வத்தன்மையுடைய கோயிலாக விளங்குகின்றது," என்று அங்கிருந்த படைஞரில் ஒருவன் கூறினான். இன்னுமொருவன் போரமைச்சராகிய சிட்னி எட்பர்ட் துரைமகனாரிடம், "இவ்வம்மையார் இங்குள்ள நோயாளிகள் ஒவ்வொருவரிடமும் இனிமையாகப் பேசுவார்; இன்னும் பலர்க்கு இவர் தலையசைத்துப் புன்னகை புரிந்து செல்வார்; யாம் நூற்றுக்கணக்காகப்படுத்துக்கிடப்பதால் ஒரே காலத்தில் இவர் எல்லோர்க்கும் அங்ஙனம் செய்தல் கூடாதாயிற்று. ஆனால் எல்லாரும் ஓய்ந்திருக்கும் இராவேளையில் இவர் தம் கையிற் சிறுவிளக்கொடு எம்மைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு வருவார்; அப்போது சுவரிற்படும் அவரது அழகிய நிழலை முத்தம் வைத்துக்கொண்டு அமைதியுடன் படுத்துக்கொள்வோம்," என்று கூறினன்.

கடும் புண்களை அறுக்கவேண்டுமாயின் நோயாளிகளின் உணர்வை மயக்கி அதனைச் செய்யும்பொருட்டு அக்காலத்திற்றான் மயக்க மருந்து[1] புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. புதிதானதால் இம்மயக்க மருந்தைக் காயம்பட்டவர்களுக்குக் கொடுக்க மருத்துவர்கள் அஞ்சினார்கள். அவர்களின் உணர்வை மயக்காமலே மருத்துவர்கள் காயங்களை அறுக்க வேண்டியவர்களானார்கள். அந்நேரத்தில் நைட்டிங்கேல் தலைவி அந்நோயாளியின் பக்கத்தே நின்று அவனைப் பல இன்னுரையால் இன்புறச் செய்து தேற்றி ஆறுதல் கூறுவார்!

சண்டையிற் குண்டுபட்டும் வெட்டுப் பட்டுங் கைகால் முறிந்துங் காயம்பட்டும் உயிர் உடம்பின்கண் உள்ளதோ, அன்றிப் புறத்தே உள்ளதோ என்னும் நிலையில் ஆற்றொணாது வருந்தும் போர்மறவர்க்கு இவ்வம்மையாரைப்போல் அன்பான உதவி செய்து ஆறுதல்

[1] Chloroform





மருத்துவச்சாலையில் அம்மையார் பணி

சொல்லவல்லார் யார்? உலகத்தில் மக்களாய்ப் பிறந்து, துன்பத்திற்கே இடமாயுள்ள இப்பிறவியில் நாம் தாங்க முடியாத் தனித்துயர் கொள்ளும்போது நம் உள்ளம் நமக்கு ஆறுதல் சொல்வார் ஒருவரையே நாடி நிற்கின்றது. ஆறுதல் மட்டுமோ? அவ்வேளையில் அன்பாகவும் அக்கரையோடும் நம்மைப் பார்ப்பவர் ஒருவர் கிடைத்தால் அவரை நாம் தெய்வமாகவே நினைந்து உருகுகின்றோம். அத்தகையவர் ஒருவர் அருகே யிருக்கப்பெற்றால் நமக்குள்ள துன்பம் எத்துணைப் பெரிதாயிருந்தாலும் அஃது அந்நேரத்தில் நமக்குத் தோன்றுவதில்லை. நமக்கே இப்படியிருந்தால், சண்டை முகத்திற் சென்று, பசியும் விடாயும் பாராது, தம் உயிரையும் ஒரு துரும்பாக எண்ணித் தம்மை மறந்து போர் செய்து, பகைவராற் படுகாயமடைந்து, பார்ப்பவர் எவருமின்றி யாருமில் அகதியாய்க் கிடக்கும் போர்மறவர், அன்பிற்கு ஓர் உறைவிடமாயுள்ள இந் நங்கையார் தம் அருகிலிருந்து உதவி செய்யப் பெற்றால், அவ்வுதவி எவ்வளவு சிறந்ததாயிருக்கும்? அவ்வுதவியைச் செய்யும் அம்மாதரார் அவர்க்குத் தெய்வமாகவே தோன்றுவரல்லரோ?

"எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு"

என்னுந் தெய்வத் திருக்குறளின் உண்மை, அங்ஙனம் ஆறுதல் எய்துவார்க்கு உண்மையாய் விளங்கல்போல் வேறு பிறர்க்கு விளங்குமா?

நம் நாட்டவர்களிலோ, தமக்கு உற்றாராயிருப்பவர் நோயுற்றுத் துன்புறுங் காலத்தும், அவரைக் கருதிப் பார்ப்பவர் மிக அரியரா யிருக்கின்றனர். தமிழ் மக்கள் இல்லங்கள் பெரும்பாலானவற்றில் ஒருவனுக்கு மனைவியா யிருப்பவள் நோய்ப்பட்டால், அவளுக்கு நெருங்கிய உறவினராயிருப்பவரும் அவள் கிட்ட அணுகினால்



தீட்டுப்பட்டுவிடு மென்னும் பொய்யெண்ண முடையவராய் அவளை அணுகாது விலகிநிற்கின்றனர்.

இனிப் பெருந் தொகையினரான நோயாளிகள் போதுமான உணவுங் கிடைக்கப் பெறாமல் ஸ்குட்டாரி மருத்துவச் சாலையின் சுவர் ஓரங்களிலும் வழிகளிலும் படுக்க வைக்கப்பட்டனர். ஏனெனில், போர் மறவர்களின் தொகை அளவுக்கு மிஞ்சியது. இந்நிலைமையிற் கிடந்த அந்நோயாளிகள் நைட்டிங்கேல் அம்மையார் வந்த சில நாட்களுக்குள் அவரது வருகையைப் பேராவலோடு எதிர் பார்த்தபடியே யிருந்தனர்.

இம் மருத்துவச் சாலையில், பிளாரன்ஸ் தலைவியாரும் அவர்க்குக் கீழுள்ள மாதர்களும், நோயாளிகளுக்குச் செய்த உதவிகளின் அருமையை ஆண்பாலார் அறிதல் மிக அரிதேயாகும். ஏனென்றால் அங்கே முதலில் நோயாளிகளின் படுக்கைகளை மிகத் துப்புரவாக வைத்தல் வேண்டும்; இல்லையேல் அவர்கள் நலங்கெடுவார்கள். அதன்பிறகு, ஒழுங்கான பத்திய உணவு அவர்களுக்குச் சமைக்கப்படல் வேண்டும்; நல்லுணவு கொடுக்கப்படவில்லையாயின், அவர்கள் நாளுக்குநாள் வலுக்குறைந்தே போவார்; மிகுதியாய்க் காயம்பட்டவர்களுக்குத் தனி மேற்பார்வை வேண்டுமன்றோ? மேற்பார்வையில்லாவிடின் அவர்கள் பிழைப்பதே அருமை. இவற்றோடமையாது, அந்நோயாளிகளின் ஆடைகளைச் சலவை செய்யுமிடமும் ஏற்படுத்தி, அதில் அவர்களுக்கு அடிக்கடி பயன்படுவதற்காகத் தூய மெல்லிய ஆடைகளும் வெளுக்கப்படல் வேண்டும். இன்றியமையாது வேண்டப்பட்ட இத்துணைப் பெரிய வேலைகளெல்லாம், பிளாரன்ஸ் அம்மையாருடைய முயற்சியாலும் ஏவலாலும் ஒழுங்குபெற நடப்பவாயின.

இவ்வம்மையார் இம்மருத்துவச்சாலைக்கு வந்த காலையில் அதில் இரண்டாயிரத்து முந்நூறு காயம் பட்டவர்கள் இருந்தார்கள். இம்மருத்துவச்சாலை இவ் அம்மையாரால் ஒழுங்குபடுத்தப்பட்ட சில திங்களுக்குட் காயம் பட்ட பத்தாயிரம் படைஞர்கள் அங்கு அனுப்பப் பட்டனர். ஆயிரக்கணக்கான இத்துணை நோயாளிகளும் இவ் அம்மையாரது மேற்பார்வையின் கீழ் நடத்தப் பட்டனர். சற்றேறக்குறைய இரண்டேகாற் கல் (மைல்) நீளமுள்ள இம்மருத்துவச்சாலை முழுதும் இரண்டரை அடி இடைவிட்டு நோயாளிகளின் படுக்கைக் கட்டில்கள் இடப்பட்டிருந்தன. நைட்டிங்கேல் அம்மையார் இவர்களெல்லாரையும் ஒழுங்குபெறப் பார்த்து, அவர்க்கு வேண்டுவன செய்தற்குத் தங்கீழுள்ள மருத்துவ மாதர்களை ஏவியதுமன்றித், தாமும் அந்நோயாளிகள் ஒவ்வொருவரையுங் கருத்தாகப் பார்த்துவந்த செயல் எத்துணைப் பேருழைப்பை அவர்க்குத் தந்திருக்க வேண்டும்!

இம்மருத்துவச் சாலையை அம்மையார் வியத்தகு முறையில் எவ்வளவோ சீர்திருத்தி, நோயாளிகளையும் அவர்தம் இடங்களையும் மிகவுந் துப்புரவாக வைத்தும், அங்கு நோயாளிகள் கணக்கின்றி இறந்தனர். ஏனெனில், மருத்துவச் சாலையாக அமைந்த அவ்விடத்திற் காற்றோட்டமும் தூய தண்ணீரும் இலவாயின. நோயினாற் றுடிதுடிக்கும் நோயாளிகளுக்கு நல்ல காற்றுந் தூய தண்ணீரும் இன்றியமையாது வேண்டப்படுமல்லவோ? இவையிரண்டும் அங்கின்மையால் அம்மையாரது அளப்பருமுயற்சி பெரும்பயன் தரவில்லை. ஆதலால் அம்மையார் பெரிதுங் கவன்று தம் மருத்துவச் சாலையில் ஏற்படும் மிகுந்த இறப்பைத் தடை செய்ய முயன்றார். அக் காலத்தில் ஸ்குட்டாரி மருத்துவச் சாலையைப் பார்த்து வருமாறு அரசியலார் மேற்பார்வையாளர்களை அங்கு அனுப்பினார்கள். அவர்கள் வந்து பார்த்தும் அம்மருத்துவச் சாலைக்கு அவர்கள் ஏதும் உதவி செய்தாரல்லர். நோயாளிகளின் இறப்பு மேன்மேற் பெருகிக்கொண்டே வந்தது. இதுகண்ட அம்மையார் இதற்குச் செய்யும்வழி யாதென்று நினைத்துப் பார்த்து முடிவிற் றமக்கு மிகப் பழக்கமான சிட்னி எர்பர்ட் துரைமகனார்க்கு, "அரசியலார் அனுப்பிய மேற்பார்வை யாளர்கள் இங்கு ஏதும் நலஞ் செய்திலர்; ஆகலான் நோயாளிகளின் இறப்பு மிகுகின்றது; இதனைத் தடைசெய்யத் தாங்கள் பெரிதும் முயலுமாறு வேண்டுகின்றேன்," என்றெழுதினார். சிட்னி எர்பர்ட் துரைமகனாரும் இவரது வேண்டுகோட்கிணங்கி, அதற்குப் பெரிதும் முயல்வாரானார். அம்மையாரும் சிட்னி துரைமகனாரும் அரசியலார்க்கு அடுத்தடுத்துக் கடிதங்கள் எழுதி வேண்டிக்கொள்ளவே, அரசியலார் திரும்பவும் மேற்பார்வையாளர்களை ஸ்குட்டாரி மருத்துவச்சாலைக்கு அனுப்பினார்கள். அவ்வாறே அவர்கள் அங்குச் சென்று காற்றோட்டத்திற்காம் சாளரங்கள் அமைத்தும், அம் மருத்துவச்சாலையைச் சூழவுள்ள இடங்களைத் துப்புரவு செய்தும், நல்ல தண்ணீருக்கு வேண்டும் வசதிகள் உண்டாக்கியுங் கொடுத்தனர். இவையெல்லாம் அம்மையாரின் பெரு முயற்சிகளினாலேயே நடப்பவாயின. "நல்ல காற்றும், தூய தண்ணீரும், இடங்களைத் துப்புரவாக வைத்தலுமே உடல் நலத்தைப் பாதுகாப்பனவாகும்; இவையின்றி, நோயாளிகளை எவ்வளவு பார்த்தாலும் பயனிலவாய் முடியும் என்பதே" அம்மையார் கருத்து.

அம்மையாரது மிகக் கருத்தான பார்வையால், அம் மருத்துவச் சாலையிற் சிலர் காயங்கள், ஆறியும், உடைந்த தலைகளின் வலி குறைந்தும் வரும்போது, நோயாளிகள் தம் வீட்டார்க்குத் தமக்காகக் கடிதங்கள் எழுதித், தாம்

தம் தோழரைவிட நல்வினை யுடைமையால் உயிர்பிழைத்திருத்தலையும், ஏதோ ஒரு நாளில் தாம் இங்கிலாந்திற்குத் திரும்பும் நம்பிக்கை இருத்தலையும் தெரிவிக்குமாறு தம்மை அன்புடன் பார்க்கும் மருத்துவ மாதர்களைக் கூச்சத்துடன் கெஞ்சிக் கேட்டனர்.

இஃதறிந்த பிளாரன்ஸ் அம்மையார், "நல்லது உமக்கு வேண்டியதைச் சொல்லுவீராக. நான் அதனைத் தெரிவிக்கிறேன்," என்று கேட்டுப், பின்னர், "நீங்கள் சொல்ல நான் எழுதுவதை விட, நுங்கள் கருத்தைத் தெரிந்து யானே உங்கள் பொருட்டு எழுதுவது நல்லது. அப்படிப்பட்ட பழக்கமில்லாதவர்களுக்குச் சொல்லி எழுதுவிப்பது பெருந்தொல்லையாகு," மென்று முடிவாகச் சொல்லினார்.

"ஆ! அப்படியானால் அம்மையே, எமக்காக எழுதுங்கள், நாங்கள் சொல்லுவதை விட நீங்கள் எழுதுவதே மிக மேலானதாகும்," என்றனர் நோயாளிகள்.

பெரும்பாலும் படைஞர்களாய்ப் போர்த்தொழிலைப் பயில்பவர்கள் மக்களுக்குரிய ஈர நெஞ்சமும் மென்றன்மையும் இல்லாதவர்களாகவே யிருப்பர். காட்டில் வாழும் மறவிலங்குகளாகிய புலி, கரடி, சிங்கம் முதலியவற்றிற்கும் இவர்கட்கும் மிகுதியாய் வேற்றுமையில்லை. இத்தகையவர்களை மென்றன்மை யுடையராக்குதற்குப், போர்த்தொழிலொன்றே சிறந்த கருவியாகும். "போர்மேற் செல்லுங்காற் கரடுமுரடான நிலங்களையும், காடுகளையும், காட்டாறுகளையும், மணல்வெளிகளையும், மலைத்தொடர்களையும் கடந்து செல்லுதலாலும், வெயிலிற் காய்ந்தும் மழையில் நனைந்தும், குளிரால் நடுங்கியும் பட்டினியும் பசியுமாய்க் கிடந்துந் துன்புறுதலாலும், அதன்பின், பகைவரைத் தாக்கிப் போரியற்றுங்காற் கைகால் முறிந்தும் படுகாயங்கள் அடைந்தும் ஆற்றொணாது நைந்து வருந்துதலாலுமே, இவர்கள் துன்பம் இன்னதென்பதனை யுணர்ந்து தமக்கு அஃது எவ்வளவு இன்னாததாயிருக்கின்றதோ, அங்ஙனமே பிறர்க்கும் அஃதிருக்கு மென்னும் உணர்ச்சி வரப்பெற்று மென்றன்மை எய்துகின்றனர். ஆதலால், அவர்களை இனியராகப் பழக்குதற்குப் போர்த்தொழிலே சிறந்த கருவியாக உதவுகின்றது. இத்தகைய இடர்ப்பாடுகளில் அகப்பட்டுத் துன்புறுங் காலங்களிலேதாம் கொடிய விலங்குகள் கூடத் தமது கொடுந்தன்மை மாறி மென்றன்மை வாகின்றன.



## 7. ஸ்குட்டாரி மருத்துவ மாதர்கள் தொழில்முறை

இனி, அங்கிருந்த மருத்துவ மாதர்கள் எவ்வாறு காலங்கழித்தன ரென்பதை நீங்கள் அறிய விரும்புகின்றீர்களா? அவர்கள் நன்றாய்ப் பொழுது விடிவதற்கு முன்னமே எழுந்து தம் படுக்கைகளைச் சுற்றிவைத்து, அறைகளையுந் துப்புரவு செய்து, சமையலறைக்குப் போவர். போய் அங்குள்ள புளிப்பான சில அப்பங்களையும் பாலில்லாத் தேயிலைக் குடிநீரையும் குடிப்பர். அதன்பிறகு, ஆண்மக்களுக்கு வேண்டும் உணவுகளையுஞ் சமைப்பர். பிறகு இரவில் வேலை பார்க்கும் மருத்துவப் பெண்கள் இளைப்பாறச் செல்லும்போது, பகல்வேலை பார்ப்போர், காலை ஒன்பதரை மணியிலிருந்து பகல் இரண்டு மணி வரையில் நோயாளிகளுக்கு வேண்டுவனவெல்லாம் மிக ஒழுங்காகச் செய்வர்; பகல் இரண்டு மணிக்கு ஆண்மக்கள் இளைப்பாறச் செல்லும்போது, களைத்துப்போன மருத்துவ மாதர்கள் தமது பகலுணவு கொள்ளச் செல்வர்; அங்கு உணவு நல்லதா யில்லாவிட்டாலும், அதனையே நிறைய உண்ண

வேண்டியவர்களானார்கள். ஏனெனில், வயிறார உண்டு தம் உடலை ஓம்பினாற்றானே வேலை செய்ய முடியும்! அதன் பின்னர், மூன்று மணிக்கு நோய் நினைவின்றி நல்ல காற்றில் வெளியே சென்று சிறிது நேரம் உலவுவர்.

ஆனால் ஐப்பசித் திங்கள் மழைகாலமாதலின், அப்போது, அவர்கள் வெளியே சென்றால் நோய் வருமென்று கூறி, அவர்கள் தலைவியரான நைட்டிங்கேல் அம்மையார் அவர்களைத் தடுத்துவிட்டார். ஆதலால், அவர்கள் எக்காலமும் எந்நேரமும் அம் மருத்துவச்சாலையிலேயே இருக்கவேண்டியவர்களானார்கள். எந்நேரமும் வேலையிலிருக்கும் அவ்விடத்திற் சிறிது நேரமாயினும் ஓய்ந்திருத்தல் முடியுமோ? மாலை ஐந்தரை மணிக்கு மருத்துவமாதர்கள் நோயாளிகளினிடத்தைவிட்டுப் போய்த் தேக்குடிநீர் அருந்தச் செல்வார்கள். ஆனால், இதற்குச் சிறிது நேரம் போதுமாகலான், உடனே மறுபடியும் வந்து இரவு ஒன்பதரை வரையிற் செய்ய வேண்டியவற்றைச் செய்வர். ஆ! ஆ! நினைத்துப் பாருங்கள்! நல்லுணவில்லாமலுஞ் சிறிதும் ஓய்வில்லாமலும் நோயாளிகளுக்கு உழைக்கும் இம்மாதரார் வாழ்க்கை எத்துணைக் கடுமையாயிருத்தல் வேண்டும்! ஆனால் அவர்கள் அதனைக் கடுமையாயெண்ணாது எத்துணை உள்ளப் பொறுமையோடும், அன்போடுஞ் செய்துவந்தனர்! அவர்கள் அங்குக் கிடைத்த பயனில்லாச் சுவையற்ற உணவை அவ்வளவு நீண்ட காலம் உட்கொண்டு நோயாளிகளுக்கும் பேருதவி செய்துவந்தது பெரு வியப்பினையே உண்டு பண்ணுகின்றது. மனத்திட்பமானது ஒருவனை எவ்வளவு ஊக்குமென்பதை நினைக்க வியப்புண்டாகாதிராது. இன்னும், மனத்திட்பமும் நல்லெண்ணமும் நற்செயலும் ஒருவனுக்கு எவ்வாறு உண்டாமெனின், அவன் அவ்வியல்புகள் மிகுதியும் வாய்க்கப்



பெற்றாரிடம் பழகுவதனாலேயே அவை யுண்டாமென்றறிக.

அம்மருத்துவச் சாலையிலுள்ள மாதர்கள் ஓய்வின்றி மிக்க வேலை செய்பவரானாலும், பிளாரன்ஸ் அம்மையாரே எல்லாவற்றையுந் தம் பொறுப்பாகவே பார்த்தார்; இவரே அங்குள்ள எல்லாவற்றையும் நினைத்துப் பார்த்துச் செய்யவும், இன்னும் அதனை முன்னேற்றவும் அளப்பரிய பாடுபட்டார்; அங்கேற்படுஞ் செலவுகளின் கணக்குகளையும் பிழைபடாமற் பார்த்துப், போரமைச்சராகிய சிட்னி எர்பர்க்கும் படைத்தலைவரான லார்ட் ரேக்லன் முதலானவர்கட்கும் அனுப்பினார். கிரிமியாப் போர்க்களத்திருந்த குற்றேவல் செய்யும் ஏவலாளர்கள், “நுங்கட்கு யாங்கள் உதவி செய்ய வரலாமா?’’ என்று கேட்டனர். அதற்கு அம்மையார், அவர்கட்கு எதனையுஞ் சொல்லிச்சொல்லியே வேலை வாங்கவேண்டியிருப்பது கண்டு, அவர்களை அங்ஙனம் ஓயாமற் சொல்லி வேலை வாங்குவதைவிடத், தாமே அவற்றை விரைவாகவுஞ் சுருக்கமாகவும் எளிதாகவுஞ் செய்துவிடலாமென்றார். அம்மருத்துவச் சாலையில் ஆண்மக்களையும் பெண்மக்களையும் எவ்வெவ்வகையிற் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதைப் பிளாரன்ஸ் அம்மையார் நன்றாக விரைவில் தெரிந்துகொண்டார். ஆதலால், அவர்கள் செய்ய அறியாத வேலைகளில், அவர்களை ஏவி வீணே காலத்தைப் போக்கவில்லை. அவரவர்களுக்குத் தகுந்த வேலைகளைக் கொடுத்து அவ்விடத்தைச் சிறந்த நிலைமைக்குக் கொண்டுவந்தார். அவர் வந்த காலத்தில் மிகவுந் திகில் கொள்ளத்தக்க நிலையினதாய்க் காணப்பட்ட அம்மருத்துவச்சாலை, அவர் செய்த அரிய ஏற்பாடுகளினாற், சில நாட்களில் மிக ஒழுங்குபடுத்தப்பட்டதாகவும், மிக்க வசதியுள்ளதாகவும் மாறிற்று.

நைட்டிங்கேல் அம்மையார் காயம்பட்ட படைஞர்களுக்கேயன்றி, எவராலுங் கருதிப் பார்க்கப்படாமல் அக்கொத்தளத்தின் ஒரு மூலையில் நெருக்குண்டு பட்டினியும் பசியுமாய்க் கிடந்துழலும் அவர்தம் மனைவிமார் பிள்ளைகட்கும் வேண்டிய உதவிகளைச் செய்யப்புகுந்தார். புகுந்து அவர்களைத் தமது பாதுகாவலின்கீழ்க் கொணர்ந்து, தமதருகிலுள்ள தூய இடங்களில் வைத்து, அம்மாதர்களிற் சிலர்க்குச் சலவை செய்யுமிடத்தில் வேலை தந்தும், ஏனைப் பலர்க்கு அங்ஙனமே வேறு பல வேலைகளைப் பகுத்துக் கொடுத்தும், அவர்களுக்கிருந்த துன்பத்தையுங் கவலையையும் நீக்கினார். இவ்வளவு ஏற்பாடுகளையும் ஒரு கிறித்துவ குருவின் உதவியாற் செய்துமுடித்தார். அம்மாதர்களின் பிள்ளைகளுக்கு ஒரு நாளிற் பல மணி நேரங் கல்வியுங் கற்பித்தார். இவ்வாற்றால் அக்குழந்தைகளின் தாய்மார் தம்மைப் பாதுகாத்துக்கொள்ளத்தக்க பொருள் வருவாயைத் தாமே தேடிக்கொண்டனர். சண்டையிற் கணவரை யிழந்த மகளிர்க்குப் பொருளும் உடையுங் கொடுத்துக் கூடியவிரைவில் அவர்கள் தத்தம் ஊர்க்குத் திரும்பிச் செல்ல நைட்டிங்கேல் அம்மையார் வழிசெய்தார்.

போர்க்களத்தினின்று ஸ்குட்டாரிக்குக் கொண்டுவரப்படுங் காயம்பட்ட போர் மறவர்களில் நலம் பெறக்கூடியவர் இவர், கூடாதவர் இவர் என அறுப்புத்தொழில்[1] மருத்துவர்கள் தெரிந்தெடுப்பர். ஒருகால், அவ்வாறு தெரிந்தெடுக்கப்பட்டவர்களில் நலம்பெற மாட்டாரெனக் கருதப்பட்டவர்கள் ஐவர் அம்மையார் பார்வையின்கீழ் விடப்பட்டனர். அம்மையார் அவர்களை மிகவுஞ் செவ்வையாகப் பார்த்ததன் பயனாக, அவர்கள் உயிர் பிழைத்தனர். ஆதலால் இதன்பின் இவருடைய பேரறிவின் பெற்றியையும், மருத்துவத் திறமையையுங் கண்ட பெரிய மருத்துவர்களும் அம்மையாருடைய கருத்துக்களையே மருத்துவ முறையில் என்றும் எதிர்பார்த்தறிய விழைந்தனர்.

[1] Surgery.



ஒருநாள் காலையில், தலைவியரான இவ்வம்மையார் தம் நோயாளிகளைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு வருகையில், அவர்தந் திருமுகத்தில் என்றுமிராத ஒரு தெளிவும், மகிழ்ச்சியுந் துளும்புவதை அங்குள்ளவர்களெல்லாருங் கண்டு வியந்தார்கள். பிற்பகலில் எல்லாரும் ஓய்ந்திருக்கும் வேளையில் அம்மையார் முகத்தில் அத்தகைய மகிழ்ச்சி தோன்றியதன் ஏதுவை அறிந்தார்கள். அப்போது குருமார்களில் ஒருவர், நோயாளி வரிசைகளைப் பார்த்துவரும்போது விக்டோரியா அரசியார் சிட்னி எர்பர்ட் துரைமகனார்க்கு எழுதிய கடிதத்தைப் படித்துக்காட்டினார். அக்கடிதம் வருமாறு :—

நைட்டிங்கேல் அம்மையாரிட மிருந்தாவது பிரேஸ் பிரிட்ஜ் அம்மையாரிட மிருந்தாவது அனுப்பப்பட்ட கணக்குவகைகளை யான் அடிக்கடி தெரிந்து கொள்ளும்படி செய்யுமாறு தங்கள் மனைவியாரை யான் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறேனென்று அவர்கட்குத் தெரிவியுங்கள். போர்க்களச் செய்திகளைப் பற்றிப் படைத்தலைவர்களிடமிருந்து எனக்கு அடிக்கடி செய்தி வருகின்றதேயல்லாமற் காயம்பட்டவர்களைப்பற்றிய செய்தி ஒன்றும் வரப்பெற்றிலேன்; பின்னையதில் எனக்கு மிகுந்த அக்கரையுண்டு. காயம்பட்டிருப்பவர்களும் நோய்ப்பட்டிருப்பவர்களுமான அச்சிறந்த ஏழைப் படைஞர்கள் படுந்துன்பங்களைக் கேட்டு என்மனம் ஆற்றொணாதாகின்றதென்றும், அவர்கள் நலமெய்துவதில் யான் மிக்க விழைவுடையேனென்றும், அவர்களுடைய அஞ்சா ஆண்மையினையும் மனத்திட்பத்தினையும் வியந்து பாராட்டுகின்றேனென்றும், இங்ஙனம் பாராட்டுவதில் அவர்தம் அரசியைவிட மிகுந்த உருக்கமுடையவர் இராரென்றும், திரு.நைட்டிங்கேல் அம்மை

யாரும் அவருடனிருக்கும் மருத்துவ மாதரும் அவர்களுக்குத் தெரிவிக்கின்றேனென்பதை எர்பர்ட் அம்மையார் உணர் வாராக. இரவும் பகலும் அரசி தன் அன்பிற் சிறந்த படைஞர்களை நினைத்துக்கொண்டே யிருக்கின்றார். அங்ஙனமே இளவரசரும்.

இங்ஙனம்,
விக்டோரியா.

இக்கடிதத்தைப் படித்து முடித்தவுடன், "கடவுளருளால் அரசி வாழ்க!" என்று அக்குரு கூவினார்; நோயாளிகளுந் தம் மெலிந்த குரலிற் "கடவுளருளால் அரசி வாழ்க!" என்று கூவினர்.

விரைவில் மருத்துவ மாதரார் தொகுதி மற்றொன்று, வந்து பாஸ்பரஸ் கடலிணைக் கால்வாயின் ஓரமாயுள்ள மற்றைய மருத்துவச் சாலையின் வேலையை ஒப்புக்கொண்டது. வெஸ்ட் மினிஸ்டர்[1] கோயிற் குருவின் உடன்பிறந்தாரான ஸ்டான்லி[2] என்னும் மாதர் ஒருவரால் இக்கூட்டத்தினர் நடத்தப்பட்டனர். இவர்களிற் சிலர் சம்பளம் வேண்டாமலே வேலை பார்த்தனர். இன்னுஞ் சிலர் சம்பளம் பெற்று வேலை பார்த்தனர். இன்னும் அயர்லாந்திலிருந்து இரக்கமுள்ள மாதரார் சிலர் அவர்களோடு வந்தனர்; இவர்கள் கன்னிமைத்துறவாடை அணிய இடம்பெற்றனர். ஆனால், மற்றவர்களெல்லாரும் அரசியலாராற் கொடுக்கப்பட்ட ஓரேவகையான உடை உடுத்திருந்தது பார்ப்பதற்கு வேடிக்கையாயிருந்தது. நைட்டிங்கேல் அம்மையார் தாம் நினைத்த இடங்களில் அவர்களை வேலைக்கு அமர்த்தினார்.

இந்த நேரத்திற் கக்கற் கழிச்சல் (வாந்திபேதி) என்னும் கொள்ளைநோய் எங்கும் பரவியது. கிரிமியாப்போர்க்களத்தில் அடித்த பெருமழையினாலும், அதனாலுண்டான

1 Westminster. 2 Stanley.



கடுங்குளிரினாலும் நூற்றுக் கணக்கான படைஞர்கள் நைட்டிங்கேல் அம்மையாரது மருத்துவச்சாலைக்குக் கொண்டுவரப்பட்டனர். சொல்லொணக் குளிரின் கொடுமையால் இவர்தம் மெல்லிய மேலாடைகள் அவருடலின் மேல் உறைந்து எடுக்கமுடியாமற் பற்றிக்கொண்டன. எண்ணெயைப் பூசி அவர்கள் உடம்போடு ஒட்டியிருந்த ஆடைகளைக் கத்தரித்து எடுத்துப் பின்னர், அவர்க்கு வேண்டுவனவெல்லாங் குறைவின்றிச் செய்தனர்; இப்படைஞர்கள் பட்ட துன்பக் கதைகளைச் சொல்லவும் பெருந்திகில் உண்டாகின்றது. பல முறைகளில் இவர் நோயாளிகளின் ஒரு வரிசைத் தொகுதியில் இருபதுமணி நேரம் நின்றபடியேயிருந்து அவர்களுக்கு வேண்டுவன செய்தார். இன்னும் அங்கு வேனிற் காலத்திலுங்கூடக் கக்கற் கழிச்சல் பரவியபடியாகவே யிருந்தது. இந் நோயாளிகளுக்குத் தம் உடம்பாலும் மனத்தாலும் உறைத்து நின்று உதவிகள் செய்து, தமக்கு நல்லுணவு கூடக் கிடையாமற் பெரும்பாடுபட்ட அம்மருத்துவமாதர்களும் உடல்நலங் கெட்டார்கள். அவர்களில் ஒருவர் நைட்டிங்கேல் அம்மையாரின் சிறந்த நண்பராவர்.அங்கே, ஐயகோ! ஒரு திங்களுக்குள் ஏழெட்டு மருத்துவர்கள் இக் கொடுநோயால் இறந்தனர்! எஞ்சியவர்கள் எட்டுப் பேர். ஆதலால், ஆயிரக்கணக்கான நோயாளிகளைப் பார்க்கும் எல்லாப் பொறுப்புகளும் அம்மையார்க்கே உண்டாயின; மற்றைக் காலங்களிற் சிறிதும் ஓய்வில்லாமல் உழைக்கும் அம்மையார்க்கு இப்போது எத்துணைப் பேருழைப்பை இந்நோய் தந்திருக்கும்! இக்கக்கற் கழிச்சல் நோய் எவ்வெவ்விடத்தில் மிகுந்திருந்ததோ அவ்வவ்விடத்தில் நைட்டிங்கேல் அம்மையாருங் காணப்பட்டார். இவரது மிகவுங் கருத்தான பார்வையால் இக் கொள்ளைநோய் விரைவில் அவ்விடத்தை விட்டகன்றது. இக் கொள்ளை

நோய் ஒருவாறு அடங்கியபின், 1855 வைகாசித் திங்களில் இவர் கிரிமியாவிலுள்ள மருத்துவச் சாலைகளைப் பார்க்கக் கப்பலிற் புறப்பட்டார். புறப்பட்டுக் கப்பலின் மேல் தட்டிற் படுத்திருந்தபோது, தாம்செய்யவேண்டிய கடமைகள் செய்யப்படாமல் வீணே கழிந்தனவே என்றெண்ணுவதற்கிடமில்லாதவாறு, அக்கடலின் நீலநிறக் காட்சி அவரை மகிழ்வித்தது. மருத்துவமாதரார் புலர் அவரோடிருந்தனர். இவ்வாறு கடற்பயணத்தை முடித்து , மருத்துவர்கள் தம்மைத் தொடர்ந்துவர நைட்டிங்கேல் அம்மையார் கிரிமியாவின் கடல்கரையில் இறங்கினார்.

இறங்கியவுடன் கிரிமியா மருத்துவச்சாலைகளைச் சுற்றிப்பார்க்கச் சென்றார்; மருத்துவச் சாலைகளைச் சுற்றிப் பார்க்கும்பொருட்டு இவர்க்கு ஒரு குதிரை கொடுக்கப்பட்டது. இவர் குதிரைமேற் போகும்போது, தாம் சிறுமியாயிருந்த ஞான்று தங்குருவொடு குதிரைமேற் சென்ற நிகழ்ச்சிகளை யெல்லாம் நினைவு கூர்ந்தார். குதிரைமேற் போவதற்கென அமைந்த உடையை உடுத்திக் கொண்டார். இவ்வுடையை அங்கிருந்த ஆங்கிலப் பெண்கள் நால்வரில் ஒருவரிடமிருந்து இரவலாகப் பெற்றார். இவர்பாற் குதிரை ஏற்றத்திற் குரிய உடுப்பு இருந்ததில்லை. இவருடைய குதிரை புதிது. பழக்கப்பட்டதாயும் நல்லியல்பு வாய்ந்ததாயு மிருந்தது. ஆனால் அஃது அச்சமுடையது; போகும்போது அது வழிதப்பித் துள்ளி ஓடியும், உதைத்தும் பெருங்கூச்சலிடும்; பெருந்தொல்லையினையே உண்டுபண்ணும்; ஆனாலும் இவர் தங்குதிரை செய்யும் இவ்வளவு தொல்லைகளையும் ஒரு பொருட்படுத்தினாரல்லர்.

நாள் முழுதும் அம்மையார் மருத்துவச் சாலைகளைப் பார்ப்பார். சில நேரங்களிற், போர் மும்மரமாய் நடந்து



வெடிகள் கிளம்பும்போதுங்கூட, உள்நின்று பகைவரைச் சுடுதற்கென வெட்டப்பட்ட நீண்ட குழிகளிற் படைஞர்கள் அடிபட்டுக் காயமடைந்து கிடக்கின்றார்களா என்று பார்க்க அவற்றினருகே போவார். இவர் இத்துணை அஞ்சாநெஞ்சினராய்த் தமக்கு வரும் ஊறுபாட்டையுஞ் சிறிதும் எண்ணாமற் போர்முகத்து வெடிகளின் ஊடே சென்று காயம் பட்டவர்களைத் தேடலானது எதனாலென்றாற், கூறுதும்: ஒரு முயற்சியைச் செய்து முடித்தலிலேயே உள்ளம் உறைத்து நின்றார்க்கு, வேறொன்றிலும் நினைவு செல்லாது; அம்முயற்சிக்கு வேண்டுவன செய்வதிலேயே கருத்து முனைந்து நிற்கும். இதனை உயர்ந்த முயற்சி செய்வார் மாட்டுந் தாழ்ந்த முயற்சி செய்வார் மாட்டும் ஒவ்வொருநாளுங் காணலாம். பொருள்தேடித் தொகுத்தலிலேயே கருத்து வைத்து வாணிகஞ் செய்வார் பலர் ஊணுறக்கமின்றித் தமது வருத்தத்தையும் பாராமல் அல்லும் பகலும் உழைத்தலை நாம் காணவில்லையா? இங்ஙனமே தாழ்ந்த முயற்சிகள் பலவற்றில் நினைவுஞ் செயலும் ஈடுபட்டு நிற்பாரும், தம் பொருட்டும், தம் மனைவி மக்களின் பொருட்டும், உழைப்பவராயிருக்க, நம் அருமை நைட்டிங்கேல் அம்மையாரோ, தமக்கு எந்த வகையிலும் தொடர்பில்லாத காயம்பட்ட போர்ச் சேவகர் பாலும் ஏழை எளிய மக்கள்பாலும், வாயற்ற விலங்கினங்கள் பாலும் அளவற்ற அன்பும் இரக்கமும் உடையரா யிருந்தமையினாலேயே, இவர் தமது வருத்தத்தையும் பாராது, தம் உயிரையும் ஒரு பொருட்டாக எண்ணாது வெடிகுண்டுகளின் ஊடேயுஞ் சென்று காயம்பட்டவர்களைத் தேடினார். இத்தகைய இயற்கை உயர்ந்த தெய்வத் தன்மை யுடையார்க்கே யுண்டாகும். அத்தெய்வத் தன்மை யுடையாரே அன்பு வடிவினராவர். அத்துணை அன்பு வாய்க்கப்பெற்ற உயர்ந்தோர்கள் பிறர் துயர்

நீக்கத் தமது உயிரையுங் கொடுப்பர் என்பது பற்றி யன்றோ தெய்வப் புலமைத் திருவள்ளுவர்,

"அன்பிலா ரெல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பு முரியர் பிறர்க்கு"

என்றருளிச் செய்தார். அப்போது வெயிலின் கொடுமையும் ஒருபுறம் வருத்தியது. இத்துணைப் பேருழைப்பின் பயனாய் நைட்டிங்கேல்அம்மையார் திடீரெனக் கடுங்காய்ச்சலாற் பற்றப்பட்டு மருத்துவச் சாலைக்குக் கொணரப்பட்டார்; இவர்பால் அன்புமிக்க தாமஸ் என்பாரும் இவருடன் சென்றார். இவர் நோய்ப்பட்டமைக்காக அங்குள்ளாரனைவரும் பெரிதுங் கலங்கித் துன்புற்றார்கள். நல்ல காலம்; அம்மையார் பதினைந்து நாட்களில் நலம் பெற்றார். தமது நோய் நீங்கத் தம்மைப் பேரன்புடன் பார்த்தவர்கட்குப் பெரு நன்றி செலுத்தினார். உடல் வலுவேறுதற் பொருட்டு இவர் தம் ஊருக்குச் சென்று இளைப்பாறுதல் நன்றென்று மருத்துவர்கள் வற்புறுத்திக் கூறினார்கள். ஆனால், அம்மையார் தம் ஊர்க்குப் போவதை மறுத்து, மறுபடியும் ஸ்குட்டாரிக்குச் சென்றார். சென்று, தம் அருமை நண்பரான ரக்லான் இறந்து பட்டதைக் கேட்டுப் பெருந் திகிலடைந்தார். இந்நண்பரது இறப்பினால் உண்டான பெருந் துன்பத்தில் அலைப்புண்டு இவர் தம் வேலையை மறுபடியுஞ் செய்யத் துவங்கச் சில நாட்களாயின. இந்நாட்களில் இவர் ஸ்குட்டாரியின் இடுகாட்டுக்குச் சென்று அங்கே திரிவார். போரிற் கடுங் காயம்பட்டிறந்த படைஞர்களுக்காக நினைவுக்குறி ஒன்று அங்கு வைக்கப்படல் வேண்டுமென்றெண்ணினார். அவரெண்ணப்படியே சிறிது காலத்துக்குப் பிறகு, அஃது அங்கே அமைக்கப்பட்டது.

அதன் பிறகு, புரட்டாசித் திங்களில் சண்டை முடிந்தது. ஆனால், அதிற காயம்பட்ட படைஞர்கள் நலம்



பெறுமலிருந்தார்கள்; தம்முடனிருந்த தம் நண்பர் பலர் நலமடைந்து தத்தம் ஊர்களுக்கு மகிழ்வுடன் போகத், தாம் மட்டுங் காயங்களாற் பெருந்துன்பமுங் களைப்புமடைந்தவர்களாய் விடப்பட்டமைக்குப் பெரிதும் வருந்தினர். ஆனால், நைட்டிங்கேல் அம்மையார் அவர்களை மிகவும் அன்பாய்ப் பார்த்திராராயின், அவர்கள் அங்கிருந்தது சொல்லொணாப் பெருந்துன்பத்தை யுண்டு பண்ணி யிருக்கும். முடிவில், அம்மையார் தம் ஊர் போவதற்கு முன்னரே, இப் படைஞர்கள் மிகவுங் கருத்தாய்ப் பார்க்கப்பட்டுத் தம் ஊர்கட்குச் சென்றனர். தாம் நோயாய் விழுந்தமையாற் கிரிமியாவில் முடியாது விடப்பட்ட தமது வேலையை முடிவு செய்தற்கு அம்மையார் இரண்டாம் முறையாக அங்குச் சென்றார்.

பனிக்கட்டியால் மூடப்பெற்ற மலைகளின்மேலே ஏறிச் செல்வதற்கென்று 1855-ஆம் ஆண்டில் தமக்கு நன்கொடையாகத் தரப்பட்ட ஒரு சிறு வண்டியில் ஏறிச் சென்று அங்கிருந்த மருத்துவச் சாலைகளிலுள்ள காயம்பட்ட படைஞர்களைப் பார்த்து ஓம்பிய வகையாய் மழைகாலம் முற்றுங் கழித்தார். சிறிது காலத்திற்கென்று ஒரு படையும் அங்கே நிறுத்தப்பட்டிருந்தது. ஏனென்றால், ஒற்றுமை யுடன்படிக்கை ஏற்படும் வரையில் அங்கு யாதொரு குழப்பமும் ஏற்படாமல் எல்லாம் ஒழுங்காக நடைபெறும்படி பார்க்க வேண்டியிருந்தது. படைஞர்களுக்கு மனக்கிளர்ச்சியும் பொழுதுபோக்கும் உண்டாதற் பொருட்டு நூல்களும் புதினத்தாள்களும் விடுக்கும்படி இங்கிலாந்திலுள்ள தம் நண்பர்களைக் கெஞ்சிக் கேட்டு அம்மையார் கடிதங்கள் எழுதினார். அவ்வேண்டுகோளுக்கிசைந்து முதன்முதல் அவற்றை அனுப்பி வைத்தவர்கள் விக்டோரியா அரசியாரும், அவர்தம் அன்னையாருமாவர். நைட்டிங்கேல் அம்மையாராற் செய்ய முடியாததாகக்

கருதப்பட்டது ஏதுமேயில்லை. கல்விபயிலும் விருப்பமுடைய பிள்ளைகட்கும் பிறர்க்கும் உதவியாம்படி பள்ளிக்கூடங்கள் அமைத்ததோடு விரிவுரைகளும் நடைபெறச் செய்தார். போர் மறவர்கள் குடித்துக் கெட்டுப்போவதைத் தடைசெய்யும் பொருட்டு ஒரு விடுதியும் ஏற்படுத்தினார். பணம் அனுப்பும் நிலையம்[1] ஒன்றமைத்துத் தம்மவர்க்குப் பணமனுப்ப விரும்புவோர்க்கு வேண்டிய வசதிகளுஞ் செய்தார்.

1856-ஆம் ஆண்டு, பிரித்தானியப் படை இங்கிலாந்துக்குச் சென்றபிறகு, பலாக்கிளேவா[2] மலையடிவாரத்திலே போரில் இறந்துபட்டவர்களை நினைவுகூருங் குறியாக ஒரு வெள்ளைச் சிலுவைக்கல்லை அம்மலைக் கொடுமுடிமேல் நிறுத்துதற் பொருட்டாக அம்மையார் பின்னுஞ் சிறிது காலம் அங்கே தங்கினார்.

பட்டங்களும் நன்கொடைகளும் எல்லாப் பக்கங்களிலுமிருந்து அம்மையார்க்கு வந்து குவிந்தன. அவர் தமது நலங்கருதாது செய்த செயற்கரும் பேருதவிகளை வியந்து பாராட்டி ஒவ்வொருவருந் தமது நல்லெண்ணத்தைத் தெரிவிக்க முயன்றார்கள். நைட்டிங்கேல் அம்மையார் இங்கிலாந்து திரும்புதற்கு ஓராண்டு முன்னரே, விக்டோரியா அரசியார் தம் போரமைச்சரை நோக்கி, நைட்டிங்கேல் அம்மையாருக்குக் கைம்மாறாகச் செயற்பாலது யாதென்று வினவ, அவர் "ஒரு மருத்துவக் கழகம் அமைத்து அதில் தாம் கண்டறிந்த சிறந்த மருத்துவமுறைகளைக் கற்பிக்கச் செய்தல் ஒன்றையே நைட்டிங்கேல் அம்மையார் விரும்புகிறார்," என்று கூறினார். இவர் கூறியதை எல்லாரும் மனமகிழ்வோடு ஏற்றனர். அரசியலிலிருந்தும் படைஞர்களிடமிருந்தும் பொருள் திரட்டப்பட்டு நைட்டிங்கேல் அம்மையார்க்கு அனுப்பப்பட்டது.

[1] Money order office. [2] Balaklava.



மாதரார் மருத்துவத் தொழில் பயிலுவதற்கு ஒரு பள்ளிக்கூடமும், இருப்பதற்கு ஓரில்லமும் அமைப்பதில் அப்பொருள் பயன்படுத்தப்பட்டது. 1860-ஆம் ஆண்டில் பாராளுமன்றத்திற்கு[1] எதிரே இவரது கருத்தின்படி புதுக் கட்டிடங்கள் கட்டி அவற்றில் நோயாளிகள் வைக்கப்பட்டனர்.

முடிவாகத் தம் உடல்நலக் குறைவால் நைட்டிங்கேல் அம்மையார் தம் அத்தையோடு தாம் பிறந்த ஊர்க்கு வந்தார். அங்கும் அவர் ஓய்ந்திருக்கக் கூடாவாறு எல்லாப் பக்கங்களிலும் வணக்கக் கடிதங்களும் நன்கொடைகளும் வந்து குவிந்தன. பல்வேறு நாடுகளிலிருந்துங்கூடப் பெருந்திரளானமக்கள் அம்மையாரைப் பார்க்க வந்தனர். அம்மையார் ஒரு சிறிதும் புகழை விரும்பினவரல்லர். எவ்வாறெனில், அவர் ஸ்குட்டாரியினின்றுந் தம் ஊர்க்குப் புறப்படப்போவதையறிந்து அரசியலார் அவர் செய்த பேரருட்பணியின் பெற்றிக்கு அறிகுறியாகச் சிறந்த படைக்கப்பலொன்று அவர்க்கனுப்பிப் பெருஞ் சிறப்போடு அவரை வரவேற்க ஏற்பாடு செய்திருந்தனர். இஃதறிந்த அம்மையார், இத்துணைச் சிறப்புக்களையும் வரவேற்புகளையும் ஏன்றுகொள்ளத் தாம் தகுதியற்றவரென்று கூறி அவர்கள் அறியாமல் அமைதியாய்த் தம் ஊர்போய்ச்சேர்ந்தார்.

இவ் அம்மையார் ஆற்றிய அரும்பெருஞ் செயலுக்காக இவரைப் புகழாதார் எவருமிலர். பெண்பாலாரிலும் ஆண்பாலாரிலும் எவருஞ் செய்திராத அத்துணைப் பெரிய மருத்துவ வேலையை ஏற்று, ஆயிரக்கணக்கான நோயாளிகளுக்குத் தாய்போல் அன்புகாட்டி அவர்களின் நோய் தீர்தற்கு வேண்டுவனசெய்த நைட்டிங்கேல் அம்மையார்க்கு எத்துணைப் பெருஞ் சிறப்புக்கள் பிறர் செய்தாலுஞ் செய்யாவிட்டாலும் அவை தாமாகவே அவர்க்கு

[1] Parliament.

அமைவ ஆயின. என்றாலும், இவர் கிரிமியாவில் இருந்த பொழுது 1856-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் கிரிமியாப் போர்க்களத்திற் படைஞர்களுக்கு செய்த அரும்பெருத விக்கு நன்றியறிதலாக விக்டோரியா அரசியார் தம் கைப்பட எழுதிய ஒரு வாழ்த்துக் கடிதத்துடன் ஒளிமணிக் கற்க ளிழைத்த அழகிய பதக்க மொன்றும் அளித்தார்; அப் பதக்க நடுவில் "அருளுடையார்க்கு ஆண்டவன் அருள்புரிவன்" என்ற ஒரு சொற்றொடரும், பளபளப்பான மூன்று வைரக் கற்களால் சூழப்பட்ட "கிரிமியா" என்னுஞ் சொல்லும் எழுதப்பட்டிருந்தன. இன்னும், துருக்கி மன்னரான சுல்தானும் ஒளிமணிக் கற்கள் இழைத்த அணிகலன் ஒன்றை இப்பெருமாட்டிக்குப் பரிசிலாகக் கொடுத்தார். இது மட்டுமன்றி, 1907-ஆம் ஆண்டில் ஏழாவது எட்வர்ட் அரசர் பெருமான் இப்பெருமாட்டிக்கு, எத்தகைய பட்டம் உரித் தாகுமென் றெண்ணிப்பார்த்து இதுவரை மாதர்கள் எவர்க்கும் அளிக்கப் பெறாததும், லார்டு மார்லி [1] என்னும் பெரியார்க்கும் அக்காலத்திற் பேர்பெற்ற அறிவுநூற்புல வர் சிலர்க்குமே அளிக்கப்பெற்றதுமான "அரசன் தகுதிச் சுற்றம்" [2] என்னும் பெரும்பட்ட மளித்தார். இன்னும், இலண்டன் நகர் மன்றத் தலைவர் "நகர் மன்ற உரிமை" [3] என்னும் பட்டம் அளித்தார்.

## 8. அம்மையாருடைய கடவுட்பற்றும் அறிவுரைகளும்

அம்மையார் தாம் செய்த இத்துணைப் பெருவேலைக ளெல்லாங் கடவுளருளாலேயே நடைபெற்றன வென்

[1] Lord Morley. [2] The Order of Merit. [3] The Freedom of City.



கின்றார். இவர் கிறித்துவ சமயத்தினர்; அச்சமயத்தி னிடத்துப் பேரன்பும் பெரும்பற்று முடையவர். ஆனால் இவர் பிறசமயங்களிலுள்ள நன்மைகளையும் பாராட்டு மியல்பினர்.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்னும் குறள்மொழி அம்மையார் கருத்துக்குப் பொருந்துவ தாயிற்று.

இறைவ னெண்ணத்தை முதலாகக் கொண்டே அவ ரவர் தத்தம் வேலைகளைச் செய்தல்வேண்டு மென்று, இவர் தம்முடன் இருந்து உதவிசெய்யும் பெண்மக்களுக்கும், மருத்துவம் பயிலும் மாதர்களுக்கும் நேரிலும் பல விரி வுரைகளிலுந் தாம் எழுதிய பல கட்டுரைகளிலும் நூல் களிலும் கூறியிருக்கின்றார். அவற்றுட் சிலவற்றை ஈண்டு எடுத்து எழுதுவாம்:—

"நீங்கள் உங்கள் பிற்கால வாழ்வில் எவ்வேலையைச் செய்யப் பழகவேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அவ் வேலையை ஆண்மக்களைப் போலவே திறமையாகச் செய் தற்கு முன்னரே பயின்றறிதல் வேண்டும். இன்றேல், பின்னர் அதனைச் செவ்வையாக செய்ய முடியுமென்று எண்ணாதீர்கள். ஆண்மக்களைப் போலவே நீங்களும் உங்கள் வேலைக்குரிய செவ்வையான முறைகளைக் கடைப் பிடித் தொழுகுதல்வேண்டும். அவ்வாறு நடந்தாற்றான் நீங்கள் கடவுளுடைய பணியை முற்றச்செய்தல் முடியும். ஏனெனில், நீங்கள் அரைகுறையாகச் செய்யும் வேலைக் குக் கடவுள் துணைபுரிய மாட்டார்.

மருத்துவச் சாலையில் மட்டுமன்றி, எல்லா விடங்களி லும் நோயாளிகளுக் குதவிசெய்யும் ஒவ்வோர் ஆணும் பெண்ணுஞ் சமயத்தொண்டர் என்றே சொல்லுதல் வேண்டும். இவர்கள் வீணே வழக்காடுஞ் சமயகுருக்கள்

போலாது, நோயாளிகளின் உடலுக்கும் உயிருக்கும் வருந் துன்பத்தைத் தமது இனிய இயற்கையினாலேயே வாய் பேசாது தீர்ப்பவராவர். இவர்களுக்கு மிகுந்த பொறுமையும், அடக்கமும், அன்பும் வேண்டற்பாலன வாகும். இவ்வாறு துன்புற்றோரைக் கருத்தாய்ப் பார்ப்பவர்க்குத் தூயவுள்ளமும், மிகுந்த பகுத்தறிவும், மேலான பணிவும் உண்டாகுமல்லவோ?

"கடவுளால் அளிக்கப்பட்ட தமது வாழ்க்கையைப் பயன்படுத்தும் முறையில் ஒவ்வொருவருங் கடவுளுக்குப் பொறுப்பாளி யாவரென்றும், பிறரது நன்மைக்கோ அல்லது அதன் இன்மைக்கோ ஒவ்வொருவரது வாழ்க்கையும் இன்றியமையாததா யிருக்கலாமென்றும் அம்மையார் நன்குணர்ந்து கூறியிருக்கின்றார். நாடோறுந் தமது பணியைக் கடவுள் பணியாகச் செய்கிற ஒவ்வொரு மருத்துவமாதருங் கடவுள் அருளைப்பற்றி ஒருமொழிதானும் பேசாதவராயிருந்தாலும் அவருடைய அருளை உலகில் விளங்கச்செய்யுந் தன்மையினால், அவரெல்லாருஞ் சமயத்தொண்டரேயாகின்றார். தமது பணியைக் கடவுள் பணியாகச் செய்யாத ஒவ்வொருவரும் பல சொற்களை விரித்துப் பேசினும், பெரியார்தம் மேற்கோளுரைகளை எடுத்துக் கூறினும் அவரெல்லாரும் உலகிற்குத் தீமை செய்பவரேயன்றி நன்மை செய்பவராகார். நாம் சொல்வனவுஞ் செய்வனவும், நமது தோற்றமும் எல்லாம், பிறரை வழிப்படுத்தவல்லன அல்ல. ஆனால் நம்முடைய உண்மை வாழ்க்கையே அவ்வாறு செய்யத்தக்கதாகும்.

"நீங்கள் கடவுளுக்கு அஞ்சி ஒன்றைச் செய்தலும் இன்னது செய்தாற் கடவுள் உவப்பன்; இன்னது செய்யாக்காற் கடவுள் வெறுப்பன் என்னும் எண்ணங்களால் உந்தப்பட்டுப் பிறர்க்குதவி செய்தலும் விழுமிய செயல்களாகா. அச்சத்தாற் செய்யும் பணி. அன்பின்பாற் பட்ட



தன்று மருத்துவமாதா யிருப்பவள் நல்லியல்பு மிக்கவளா யிருத்தல் வேண்டும். நல்ல பெண்மகளெனப்படுபவள் கடவுட் பணியை மிகக் கருத்தாயுஞ் சுறுசுறுப்பாயுஞ் செய்பவளா யிருப்பள். இன்றேல், அவள் உண்மையில் வெற்றோசையிடும் மணிக்கே ஒப்பாவள். நோயாளிகளுக்குதவிசெய்யும் நல்லெண்ணம் பெண்மகளொருத்திக் கமையுமாயின் அவளே இறைவனுக்குகந்த அடியாளாவள். ஏனெனில், உலகிலுள்ள எல்லா வுயிர்களுக்கும் இறைவன் அளவிலா நன்மையைச் செய்து வருகின்றானாதலால் அவனைப்போல் நன்மை செய்யுமொப்பற்ற இயல்பு ஒரு சிறிது அவள் வாய்க்கப்பெறுவாளாயின், அவளே கடவுளிடத் துண்மையான அன்பு வைப்பவள். நம்முடைய வாழ்க்கையானது இறைவனை வேண்டிநிற்கும் நிலையிலமைந்திருக்கின்றது; நாம் எச்சொல்லைச் சொன்னாலும், எச்செயலைச் செய்தாலும் அவையெல்லாம் இறைவனை நினைந்தே நடைபெறல் வேண்டும்!

"நோயாளிகளின் துன்பத்தைத் தன்னறிவாற் கண்டு தன்னை ஒரு தெய்வமாதாகத் தானே தன்னை உயர்த்தெண்ணி ஒரு பெண்மகள் பிறர்க்கு உதவி செய்வளாயின், அவளதன்பு முனைப்பு மிக்கதாயிருத்தலின், அதுவும் பயனற்றதாகும்; யான் என் நலங்களை வெறுத்துதவி செய்கின்றேனென்னும் செருக்குடன் உதவி செய்பவளும் அன்புடையவளல்லள்; மருத்துவத்தொழிலில் ஏதாவதொன்றைத் தன் பெருமைக்கு இழுக்காவதென்று நினைப்பளாகில், அவள் உண்மையான மருத்துவமாதாக மாட்டாள். ஆனாற் கடவுளருளால் தூண்டப்பட்டு நம்மிடம் வரும் ஒரு சிறந்த பெண்மகளையோ நாம் எவ்வளவு மகிழ்வொடு வரவேற்கவேண்டும்! அவள் தன் வேலையை எத்துணை மகிழ்வுடன் செய்வள்! நோயாளிகளுக்குப் பணிசெய்தலில் தொல்லைகள் மிக்கிருந்தாலும் அப்பணியினால் வரும் இன்

பத்தை நாம் உணர்ந்தமைபோல வேறு யார் உணரவல்லார்' என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? ஆனால் 'என்செயலாவது யாதொன்றுமில்லை; இனித் தெய்வமே உன்செயலே யென்றுணரப் பெற்றேன்' என்று பட்டினத்தடிகள் அருளிய திருமொழி இங்கே நினைவுகூரற்பாற்று.

"நோயாளியைப் பாதுகாக்கும் வேலை மிகவும் விழுமிய தொன்றாகும். அதன் பெருமைக் குரியவை யாவையெனின், விடாமுயற்சியுஞ் செய்வன திருந்தச் செய்தலுமேயாம். நோயாளிகளைப் பாதுகாக்கும் மருத்துவ மாதர்களுக்குத் துப்புரவும் அமைதியும் சிறந்த இயல்புகளாகும். மருத்துவச் சாலைகளில் நடமாடும் அம்மாதர்கள் தலைவாயிலிலும் படிக்கட்டுகளிலும் நின்று பேசும்போதும் மிக மெதுவாய் அமைதியாய்ப் பேசுதல் வேண்டும். நோயாளிகளின் அறைகளினின்றும் மாதர்கள் வரும்போது ஓசைபடாமற் கதவுகளை மெதுவாகச் சாத்தி வரல் வேண்டும். அறைகளிற் புழங்கும் ஏனங்களை ஒழுங்குபடுத்தும்போதும் ஓசை பிறவாவாறு அதனைச் செய்தல் வேண்டும். நோயாளியின் அறை தெய்வ உலகுபோல் தூய்மையும் அமைதியுமுடையதாய் இலங்குதல் வேண்டும். நோயாளிகளின் உடம்பை மட்டுந் துப்புரவாக வைப்பது போதாது; அவர்களிருக்கும் அறையையும் மிகவுந் துப்புரவாக வைத்தல் இன்றியமையாதது. இந்த முறையிற் செய்யவேண்டிய எந்தச் சிறிய வேலையையுஞ் சிறுமை தருவதென்று எண்ணுதல் கூடாது.

"நீங்கள் நோயாளிகளைக் கண்ணுங் கருத்துமாய்ப் பார்ப்பதைக் கடவுட் பணியாக எண்ணவில்லையா? அப்படிப் பார்ப்பதானது கடவுளைத் தொழுதலாகுமன்றோ? ஏனெனிற் கடவுள் மக்களிடத்திற் காட்டும் அருளிரக்கத்தைக் கண்டு, நீங்களும் அன்புடன் நோயாளிகளுக்குச் செய்யும் பணியானது சமயத் தொண்டின் சிறப்பியல்பாகுமன்றோ? உங்கள் பணியை நீங்கள் திருத்தமுறச் செய்



தற்கு நீங்கள் இப்பொழுது அறிந்துகொள்ளாவிட்டாற் பின் அதனை நீங்கள் எப்படிச் செய்யமுடியும்? இந்தப் பணிக்காக நீங்கள் நாடோறும் பயிலுகிற பயிற்சி கடவுளை வழுத்துவதாகாதோ?"

* ஒருவன் நோய்நீங்கி நலம்பெறுதல் கடவுளருளாலேயாம் என்று கூறுவது உலகவழக்கு. ஆனால், அது மட்டுமன்று; ஒருவன் நலம்பெறா திருத்தலும், நோய்வாய்ப்படுதலும், இறத்தலுங்கூடக் கடவுளருளாலேயாம். இவையெல்லாம் நிகழ்வது கடவுளின் ஆணைவழியாலன்றோ? இவ்வாணைவழி யொழுகுதல் இறைவனுடைய பேரின்பத்தையும் பேரருளையும் பெறுதற்குரிய வழியன்றோ? கொள்ளைநோய் வருதலும் வாராதொழிதலும் இறைசெயலேயாகும். ஆனால், இவை எல்லாம் நமக்கு வருவதானது கடவுளின் ஆணைவழி நாம் ஒழுகுதற்கேயாம்."

"அவனன்றி யோரணுவும் அசையாது"

என்ற அருண்மொழிக்கேற்ப அம்மையார் இறைவனை இமைப்பொழுதும் மறந்தவரல்லரென்பது அவரது வரலாற்றினாற் புலனாகின்றது. அம்மையார் மற்றவர்களுக்குக் கூறிய அறிவுரைகளின்படியே தாமும் நடந்துகாட்டிப் பெரும்பயன் விளைத்தமை பெரிதும் பாராட்டற்பாலதொன்றன்றோ?

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணஞ் செயல்"

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்ற திருக்குறட் பொருள்கள் அம்மையாரது வாழ்க்கையில் நன்கு விளங்கலாயின. அம்மையாரின் கீழிருந்து வேலை பார்த்த மாதர்களும், அவருடைய அறிவுரைகளைக் கேட்டவர்களும் அவர்போற் புனிதராக ஒழுகினர்.

* Notes on Nursing (Her best known work was published in 1860.)

## 9. அம்மையாரது பிற்கால வாழ்வு

அம்மையார் நீண்டகாலமாக மருத்துவக் கழகங்களை நடாத்தி முடிவில் நோயின் மிகுதியால் அது தணித்தற் பொருட்டுத் தம் ஊர்க்கு வந்தார். அப்போதுதான் பெரும் பட்டங்கள் பெற்றுப் பெரிய வேலைகளிலுள்ளா ரெல்லாரும், மற்றுமுள்ளாரும் பெருங்கூட்டமாய் வந்து அவரை வரவேற்றனர். இத்தகைய பெருஞ்சிறப்பான வரவேற்புப் பெண்பாலர் எவர்க்கும் இதுகாறும் நடந்த தில்லை.

அம்மையார் பல்லாண்டுகள் நோயாளிகளுக்காக உழைத்த பேருழைப்பினாலும், ஆண்டின் முதிர்ச்சியாலும் மிகவும் உடல் மெலிந்தவரானார். ஆகலான், இவர் பெரும் பாலும் வெளியே போகாமல் அறைக்குள்ளேயே யிருந்தார். அவ்வாறிருந்தாலும், எந்நேரமும் எழுத்தின் வழியாய் உலகத்தார்க்குப் பல நன்மைகள் செய்து கொண்டே யிருந்தார்; பல கட்டுரைகளும் எழுதிப் புதினத்தாள்களில் வெளியிட்டார். இவர் இங்ஙனம் ஓவாது செய்யும் எழுத்து வேலையால் மேன்மேலும் உடல் நலங் கெடுமென்று அன்பர்கள் பலர் எவ்வளவோ வற்புறுத்திக் கூறியும், அம்மையார் அவ்வாழ்க்கையை மாற்ற முடியவில்லை. ஆங்கில நாட்டிலும் பிறநாடுகளிலு முள்ள மருத்துவத் தலைவர்களெல்லாரும் மருத்துவச் சாலைகளை நடாத்துஞ் சிறந்த முறைகளைப்பற்றி அம்மை யாரை எழுதிக் கேட்டறிந்தனர். உலகத்திற் பெரியவ ரென நன்கு மதிக்கப்பட்டவர்களில் அம்மையாரும் ஒருவராவர்.

அம்மையார் ஒருகால் அரசியாரைக் காணச் சென்றார். அப்போது அரசி, அரசர், அமைச்சர் எல்லாரும் நோயாளி களுக்குச் செய்யவேண்டிய சீர்திருத்தங்களைப்பற்றி அம்மையாரோடு பேசிக்கொண் டிருந்தார். அம்மையார்



பேசியதைச் செவ்வனே பார்த்த அரசர் பெருமான் தம் நாட்குறிப்புப் புத்தகத்திற், "போர் மறவர்களின் மருத் துவச் சாலைகளின் குறைபாடுகளையும் அக் குறைபாடுகளை நீக்கத்தக்க சிறந்த முறைகளையும் நைட்டிங்கேல் அம்மையார் மிகத் தெளிவாக நமக்கு அறிவிக்கின்றார்; அவரோடு பேசி மிக மகிழ்ந்தோம்; அவர் மிகுந்த அடக்க முடையவர்", என்றெழுதி வைத்தார்.

நாடு நகரங்களின் நலங்கள், மருத்துவம், படைஞர் களின் மருத்துவச் சாலைகள் என்னும் இவற்றின் முன்னேற்றத்திற்காக எவ்வளவு தம்மாற் செய்யக் கூடுமோ அவ்வளவும் அம்மையார் செய்தார். அம்மையார் செய்த முறைகள் போர் மறவர்களுக்கு மட்டுமல்ல; ஏனையோர்க்கும் பயன் அளிப்பவையேயாம். நாட்டுப் புறங்களிலும், நெருக்கமான இடங்களிலுமுள்ள ஏழை மக்கள் தம் வீடுகளையும் இடங்களையும் துப்புரவாக வைத்துக்கொள்ளும் வழிகளை அவர்க்கறிவிக்குமாறு இங்கிலாந்திலும் ஏனையநாடுகளிலும் மேற்பார்வையாளர்கள் அரசியலாரால் அமர்த்தப்படல் வேண்டுமென்று பல புதினத்தாள்களுக்கு மெழுதினார். அம்மையார் கருத்துக் களையும், நோக்கங்களையும் மிக்க ஆவலோடு எதிர்பார்த் திருந்த அரசியலார் அவர் கருத்துக்கிசைய நலத்திற்கு மேற்பார்ப்பவர்களை ஆங்காங்கு அமைத்தனர்.

இன்னுமிவர், தம் நாட்டிற்கேயன்றி இந்தியாவிற்கும் இத்தகைய பல பெரு நன்மைகளைச் செய்தார். இந்தியாவி லுள்ள படைஞர்களுஞ் செவ்வனே பார்க்கப்படல் வேண்டுமென் றெழுதினார். இந்தியாவின் குடிமக்கள் நோயின்றி வாழும் வழிகளை அறிதல் வேண்டுமென்று இவர் பேராவல் கொண்டார். பாம்பே, கல்கத்தா, சென்னை முதலிய தலைநகரங்களில் மக்கட் கூட்டம் மிக நெருக்கமா யிருப்பதால் அங்குக் கொடிய நோய்கள் பரவாவண்ணம்

இடங்கள் துப்புரவாக இருக்கவுந் தூய தண்ணீர் அமைத்துக் கொடுக்கவும் ஆங்காங்குள்ள தலைவர்களுக்கு எழுதிப் பெருமுயற்சி செய்தார்.

இன்னும் இவரது அளவிடப்படா அரும்பெருமைப் பணிக் குடிமக்களெல்லாரும் பாராட்டி ஐம்பதாயிரம் பவுன் திரட்டித் தொகுத்து அவர்க்குப் பரிசாக அளித்தனர். ஆனால் தந்நலஞ் சிறிதுங் கருதாத இப்பெருமாட்டி அப் பெரும் பொருளைத் தமக்கென வரைந்து வையாமல், மருத்துவக் கழகங்களும் பள்ளிக்கூடங்களும் அமைத் தற்கு அதனைப் பயன்படுத்தினார்.

இவ்வம்மையாரைப் பற்றற்ற துறவியென்றும் அழைக்கலாம். நல்ல ஊணும் உறக்கமு மின்றி அல்லும் பகலும் நோயாளிகளோடிருந்து, அவர்களை நலப்படுத்து தற்கெனவே தம் வாழ்நாள் முழுதும் ஒப்படைத்த இவ் அம்மையாரே உண்மைத் துறவியாவர். பொதுப்பட நோக்கும்போது மக்களெல்லோரும் படும் பாடெல்லாம், பொருள் தொகுத்துத் தம் மனம்போன வழிகளிலெல்லாஞ் செலவுசெய்து வாழ்தற் பொருட்டாகவே நடைபெறு கின்றன. மிகுந்த பொருள் தமக்கு வருமாயின் மக்கள் இழிதொழில்கள் பல செய்வதையுங் காண்கின்றோம். இன்னும், எத்தகையவருந் தமக்கு வரும்பொருளைத் தமக்குந் தம்மவர்க்குமே உரிமையாக வைக்கக் காண்கின்றா மல்லது, இவ் அம்மையாரைப் போற் றமக்கு உரிமையாகக் கிடைத்த பெரும்பொருளையும் பிறர்பொருட்டுச் செல வழிக்கக் காண்கின்றாமில்லையே! ஆதலால், இந் நைட்டிங்கேல் அம்மையாரது தூய அருள் உள்ளத்தின் பெருமையினை எங்ஙனம் வியப்பேம்! எவ்வாறு புகழ் வேம்! அருளொழுக்கத்திற் றலைசிறந்த நைட்டிங்கேல் அம்மையார் 1910-ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் தமது 91-வது ஆண்டில் இவ்வுலகவாழ்வு நீத்து இறைவன் திருவடி நீழல் எய்தினார்.

முற்றிற்று.

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA
WORKS PUBLISHING SOCIETY,
TINNEVELLY, LTD.
6, Coral Merchant St., Madras.

OR

East Car St., Tirunelveli.